பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

சரியான நேரத்திற்கு
'ஹெமெக்ஸ்'
கைக்கடிகாரங்கள்

GEMEX
அடிகிய மாதிரிகளில்
எங்கும் கிடைக்கும்

தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4596 1984 ஜூன் 30 சனிக்கிழமை ★ ★ ★ தினபதி

சரியான நேரத்திற்கு
'ஹெமெக்ஸ்'
கைக்கடிகாரங்கள்

GEMEX
அடிகிய மாதிரிகளில்
எங்கும் கிடைக்கும்

# திஸமகாராம நீதிமன்றத்துக்கு தீ!

# கட்டடம் முற்றாக எரிந்து நாசம்

## காவலாளிகள் இருவரையும் கட்டிப் போட்டுவிட்டு 5 பேர் செய்த அட்டூழியம்

கொழும்பு, ஜூன் 30

திஸமகாராம மஜிஸ்திரேட் நீதிமன்றம் இனந் தெரியாத நபர்களினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. கட்டடம் முற்றாக எரிந்து சாம்பலானது.

நேற்று அதிகாலே அங்கு வந்ததாகச் சொல்லப்படும் ஐவர், கடமையில் இருந்த இரண்டு காவலாளிகளேயும் கட்டிப் போட்டு விட்டு, நீதிமன்ற கட்டடத் துக்கு தீ வைத்தனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:— சம்பவ தினம் இரண்டு காவலாளிகள் நீதிமன்றத்துக்கு காவல் இருந்தனர். அதிகாலே 3 மணியளவில் ஐந்து பேர் அங்கு வந்தனர். காவலாளிகளைக் கட்டிப் போட்டனர். பின்

(2 ஆம் பக்கம் பார்க்)

### பெருநாள் சிறப்பிதழ்

இன்றைய தினபதி "ஈதுல் பித்ர்" பெருநாள் சிறப்பிதழை விசேஷ இணைப் பாகக் கொண்டு வெளிவருகிறது. பக்கங்கள் 14.

உங்கள் பிரதியை பெருநாள் சிறப்பிதழுடன் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

### வடக்கில் ஜப்பானிய பிக்குவை தாக்க முயற்சியாம்

கொழும்பு, ஜூன் 30


ஆயுதந் தாங்கிய இளைஞர்கள் சிலர், ஜப்பானிய

(2 ஆம் பக்கம் பார்க்)

### எக்ஸ்ரே பிரிவு

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் 4 இலட்சம் ரூபா செலவில் அமையவுள்ள எக்ஸ்றே பிரிவுக் கட்டடத்துக்கான அடிக்கல் இன்று நடப்படும்.

### ஈத் முபாரக்



## காப்புறுதிக் கூட்டுத்தாபன

காப்புறுதிக் கூட்டுத்தாபன

# கட்டடத்தில் குண்டு

கொழும்பு, ஜூன் 30
கொழும்பு கொம்பனித் தெருவில் உள்ள தேசிய காப்புறுதி கூட்டுத்தாபன தலைமையகக் கட்டடத்தில் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அக்குண்டுடன் 45 டைனமைட்டுகள் பொருத்தப்பட்டிருந்தன.

பிரஸ்தாப கட்டடத்தின் 5ஆவது, 6ஆவது மாடிகளுக்கு இடையில் உள்ள மலசலகூடத்திலேயே குண்டு வைக்கப்பட்டிருந்தது.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே நேற்று இதனைத் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:—

வியாழக்கிழமை மாலை 2.15 மணியளவில் வெடிக்கக்கூடியதாக இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குண்டை கண்டு பிடித்தார்.

குண்டு வெடித்திருந்தால்

(2 ஆம் பக்கம் பார்க்)



## லலித் — நரசிம்மராவ் சந்தித்துப் பேசினர்

புதுடில்லி, ஜூன் 30
தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவுடன் பேச்சு நடத்தினர்.

இந்திரா — ஜே. ஆர். சந்திப்புக்கு முன்னேடியாக இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று புதுடில்லி வருகிறார். 3 நாட்கள் அவர் இங்கு தங்கி இருப்பார். (த)


எமது
வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
உளங் கனிந்த



ஈத்
முபாரக்
வாழ்த்துக்கள்!

நவநாகரிக நங்கையர்கள் விரும்பும் புத்தம் புதிய சாரிகள், வானவில்லின் வர்ணம் காட்டும் புதிய டிசைன்கள் உயர் ரக ரெடிமேட் ஷேர்ட்டுகள் ஷூட்டிங்ஸ், நாகரிகப் பொருட்கள் அத்தனைக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம் இலாபமான விலையில் திகைக்க வைக்கும் வகையில் ஜவுளி ரகங்களை உங்களுக்காக வழங்குகிறோம்.

குட்லக்
எம்போரியம்
(முருகன் கோயில் அருகே)
137, முதலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி: 548525


# ஒபரோயில் தங்கியிருந்த தம்பதியரை தேடி வேட்டை

## சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 30
லங்கா ஒபரோய் ஹோட்டலில், கடந்த வியாழக்கிழமை நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, தேடப்படும் தம்பதியரின் தோற்றம் குறித்து நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குண்டு வெடித்த 810ஆம் இலக்க அறையில் இவர்கள் தங்கி இருந்தது தெரிந்ததே. இந்த தம்பதியர் சம்பவ தினம் காலை 9-30 மணியளவில் ஹோட்டலை விட்டு ஆட்டோ ஒன்றில் சென்றதாக நம்பப்படுகிறது.

தம்பதியரில் ஆணின் உயரம் 5 அடி 6 அங்குலம் இருக்கும். நிறம் கறுப்பு. சாதாரண மீசை, சுருள் மயிர், பக்கவாட்டில் சீவப்பட்டது. சாதாரண தோற்றம் என உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினர்.


பெண்ணின் உயரம் சுமார் 5 அடி, 3 அங்குலம் இருக்கும். மா நிறம், நடுவில் சீவிய சுருள் தலை மயிர். இருவரும் 20 வயதை எட்டியவர்களாக இருப்பர் என்றும் அவர் சொன்னர்.

இந்தத் தம்பதியர் ஹோட்டலுக்கு தங்க வந்த பொழுது இலக்கம் 33, ஐஸ் பெக்டரி வீதி, நீர்கொழும்பு என்ற முகவரியைக் கொடுத்திருந்தனர். அந்த முகவரி உண்மையானது; ஆனால், ஹோட்டலில் தங்கிய தம்பதியர் கொடுத்த பெயரில் அங்கு எவரும் இருக்கவில்லை. போலிப் பெயர்தான் கொடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஹோட்டலில் வெடித்த குண்டு நைட்ரோ — கிளிஸரைனில் தயாரிக்கப்பட்டது என்றும், 50 இறுத்தலுக்கும் மேலானது என்றும், மிக

(2 ஆம் பக்கம் பார்க்)

## சோமண்ணை



ஈத் பெருநாள் தினத்தில் நடக்கும் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் நல்ல பயனைத் தரப் பிரார்த்திப்போம்.

## இஸ்ரவேலருக்காக குண்டு வைக்கப்பட்டிருக்க முடியாது

கொழும்பு, ஜூன் 30
ஒபரோய் ஹோட்டலில் வெடித்த குண்டு, அங்கு தங்கியிருந்த இஸ்ரவேலர்களுக்காக வைக்கப்பட்டிருந்தது என்பதை நம்ப முடியாது. ஏனெனில் அவர்கள் 25 ஆம் திகதியில் இருந்து நகருக்கு வெளியே சென்று விட்டனர்.

இஸ்ரவேலர்கள் இருவரும் 714, 717 ஆம் இலக்க அறைகளில் தங்கியிருந்தனர். குண்டு வெடித்த மாடிக்குக் கீழேயுள்ள மாடியில் இந்த அறைகள் உள்ளன.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே, இத்தகவலை நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (க)

## நோன்பு தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.23 |
| ஸுபஹு | — காலை | 4.38 |
| சூரிய உதயம் | — காலை | 5.58 |
| ளுஹர் | — பகல் | 12.20 |
| அஸர் | — பி.ப. | 3.42 |
| மஃரிபு | — மாலை | 6.30 |
| இஷா | — இரவு | 7.50 |


மகத்துவமிக்க நோன்பினை
மலர்ந்த நெஞ்சுடன் நோற்று
மகிழ்வுடன்
பெருநாளைக்
கொண்டாடும் எம்
இஸ்லாமிய



சகோதரர்களுக்கு, நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எம் நெஞ்சம் நிறைந்த
ரமழான் வாழ்த்துக்கள்!

மங்கையர் நெஞ்சையள்ளும் எழில்மிகு வெளிநாட்டுச் சாரிகள் — ஆடவரை அள்ளிக் கொள்ளச் செய்யும் அழகு வர்ணங்களில் அற்புதமான சேர்ட்டிங்ஸ்— சூட்டிங்ஸ் — டீ சேர்ட்டுகள் — ரெடிமேட் ஆடைகள் — மழலைச் செல்வங்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்யும் பேபி சூட்டுகள் — பாதணிகள் — வாசனை ஆடம்பரப் பொருட்கள் அனைத்தையும் தரமானதாக தருவதில் தலைநகரிலே தனித்துவமானவர்கள்.

KLASSIC PARADISE
-TEXTILE CENTRE-
119—A, MAIN STREET
COLOMBO — 11. T'phone: 549919


ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 30 —
சுடர் 17 கதிர் 2715


## பெருநாள் சிந்தனை

ஒரு மாதம் முழுவதும் நோன்பு அனுஷ்டித்து இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றை நிறைவேற்றிய மகிழ்ச்சியில் உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் நாளை ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடுகிறார்கள்.

ஈதுல் பித்ர் ஈகைக்கென்றே ஏற்படுத்தப்பட்ட திருநாள்.

ஈகைக்கு மட்டுமல்ல, தியாகத்துக்கு என்றும் ஒரு பெருநாள் இருக்கிறது. அது ஹஜ்ஜுப் பெருநாள்.

ஈகையும் தியாகமும் சிறந்த மனிதப் பண்புகள்.

இவை இரண்டையும் வளர்ப்பதற்குப் பெருநாட்களையே ஏற்படுத்திய பெருமை உலகில் இஸ்லாம் மார்க்கத்துக்கு மட்டுமே உண்டு.

மனிதன், தான் வாழ்ந்தால் மட்டும் போதாது. மற்றவர்களையும் வாழவைக்க வேண்டும்.

தியாக சிந்தையும் ஈதல் பண்பும் இல்லாதவர்களால் மற்றவர்களை வாழவைக்க முடியாது. அதனாலேயே இஸ்லாம் தியாகத்தையும் ஈகையையும் வலியுறுத்துகிறது.

ஏழைகள் வாழ்நாள் முழுவதும் பசியால் வாடுகிறார்கள். அவர்களின் பசிக் கொடுமையைப் பணம் படைத்தவர்கள் உணர்ந்தால்தான் ஏழைகளுக்கு உதவி செய்ய முன்வருவார்கள்.

ஏழைகளின் பசிக் கொடுமையைப் பணம் படைத்தவர்கள் உணர்வதற்கு நோன்பு

# பொலீஸார் சுட்டதும் மாணவர்கள் சிதறி ஓடினர்கள்

## கைதான மாணவர் ஜயசிறி சாட்சியம்

கண்டி. ஜூன் 29

பொலீஸார் சுட்ட போது மாணவர்கள் சிதறி ஓடினார்கள். மேட்டுப் பக்கம் நோக்கி அவர்கள் ஓடினார்கள்.

இவ்வாறு கூறினார், பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர் பத்மசிறியின் மரணம் தொடர்பாக நடைபெற்ற மரண விசாரணையில் சாட்சியம் அளித்த ஜீ. எம். ஜயசிறி (வயது 21) என்ற மாணவர்.

கண்டி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தொடர்ந்து ஐந்தாவது நாளாக இந்த விசாரணை மாஜிஸ்திரேட் திரு. ஸி. நாணயக்கார முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த அவர் மேலும் கூறியதாவது:—

"சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு நாம் மூவர் பேராதனைப் பல்கலைக்கழக பொலீஸ் நிலையம் சென்று அங்கு நிலையப் பொறுப்பாளரைச் சந்தித்தோம். அப்பொழுது அவர் முன்னிலையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் "ஆம் நான் அடித்தேன். முடியுமானால் உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்" என்று எங்களை நோக்கிக் கூறினார்.

"இங்கு சாட்சியம் அளிக்க நான் பொலீஸ் பாதுகாப்பில் இருந்து கொண்டு தான் வந்திருக்கின்றேன். விசாரணை

தின் பின் புறமாகவே இருந்தோம்.

நிலையப் பொறுப்பாளர் இது பற்றிக் கேட்டார். அப்பொழுது கூட கூட்டம் வெளியே தான் இருந்தது. "எங்களை பொலீஸ்காரர்கள் கைது செய்யப்பார்க்கிறார்கள் என்று அவரிடம் கூறிய பொழுது "நான் கூட இதுவரையும் ஒருவரையும் கைது செய்யவில்லை என்றார்.

மிக அமைதியான முறையிலேயே அவர் அப்படிச் சொன்னார்.

நாங்கள் அவ்விடம் இருந்து திரும்பும் பொழுது எங்களில் ஒருவரை பொலீஸார் கைது செய்து விட்டதாக பொறுப்பாளரிடம் எடுத்துக் கூறினோம். அவரை வெளியே விடும்படியும் தெரிவித்தோம்.

எங்களையும் பிடித்துக் கொள்வார்கள் என்ற பயம் எனக்கும் ஏற்பட்டது. நாம் மூவரும் அங்கிருந்து மெல்ல வெளியேறி விட்டோம்.

என்னோடு இருந்த மூன்றாவது நபர் மார்க்கஸ் பெர்னண்டோ விடுதியில் உள்ள கலைப் பட்டதாரி மாணவராவார். அவரும் குடித்திருக்கவில்லை.

அப்பொழுது பொலீஸ் நிலையத்தின் கதவு மூடப்பட்டது. பொலீஸ் நிலையத்தின் முன்பாக சுமார் 15 மாணவர்கள் கூடி இருந்தனர். அதேவேளையில் ஹில்டா ஒபயசேகரா சாலைப் பக்கம் இருந்து சத்தம் வந்து கொண்டிருந்தது.

அப்பொழுது சுமார் 50 பேர் அங்கு திரண்டு விட்டனர். அவர்களுடன் நாங்களும் சேர்ந்து கொண்டோம்.

கலகாப் பாதைப் பக்கமாக இருந்து சில கற்கள் வீசப்பட்டன. அது பொலீஸ் நிலையத்துக்கு முன்னுள் இருக்கும் பாதை. கல் பட்டதும் பொலீஸார் சுட்டனர். நான் அப்பொழுது வெளியே இருந்தேன்.

நிலைமை மோசமாகியதை அடுத்து நான் கலைப்பீடத்தை நோக்கி ஓடினேன். அங்கு இருந்து நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பொலீஸார் சுட்ட பொழுது மாணவர்களில் சிலர் மேட்டுப் பக்கம் நோக்கி சிதறி ஓடினார்கள். பொலீஸ் நிலையத்துக்கு கற்கள் விழும் பொழுது துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. துப்பாக்கிச் சூடு நடைபெற்றதும் மேலும் மாணவர்கள் அங்கும், இங்கும் சிதறி ஓடினர். கலகாப் பாதையில் பலர் கூடியிருப்பதையும் நான் கண்டேன்."

இப்படி அவர் கூறினார்.

(எ–100)

## பெரிய பள்ளிவாசலில் விசேட மாநாடு

கொழும்பு, ஜூன் 30

இன்று 30ஆம் திகதி கொழும்பு பெரிய பள்ளிவாசலில் மஃரிபு தொழுகைக்குப் பின்னர் விசேட மாநாடு ஒன்று நடைபெறும்.

ரமழான் நோன்புப் பெருநாள் திகதியை நிர்ணயிப்பதற்காகவே இந்த மாநாடு கூட்டப்படுகிறது.

கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள ஜும்மாப் பள்ளிவாசல்களின் கதீப்மார்கள், தர்மகர்த்தாக்கள், உலமாக்கள் ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்கு பற்றுவர்.

இதேவேளை "ஷவ்வால்" தலைப்பிறை தென்பட்டால், கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்குத் தகுந்த ஆதாரங்களுடன் அறிவிக்குமாறு முஸ்லிம்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கு இத்தகவலை தொலைபேசி 32110 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முஸ்லிம்கள் உடனடியாக அறிவிக்கலாம்.

இவ்வாறு பெரிய பள்ளிவாசலின் பொதுச் செயலாளர் அல்ஹாஜ் ஏ. எச். ஷாபி முகம்மது தெரிவித்திருக்கிறார். (எ–7)



கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து போலி பாஸ் போர்ட்டுகள் சகிதம் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட

## மாஜிஸ்திரேட்டை அச்சுறுத்தியவருக்கு ஏழு வருட கடுங்காவல்

கொழும்பு, ஜூன் 30

கண்டி மாஜிஸ்திரேட் திரு. சந்திரதாச நாணயக்காராவைக் கொலை செய்வதாக அச்சுறுத்தி தமது மனைவியை விடுதலை செய்யக் கோரிய சந்தேக நபருக்கு ஏழு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

வியனகே சிறில் என்ற 29 வயதுடைய இந்த சந்தேக நபர் செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவர் மீதான குற்றச்சாட்டுகள் சிங்களத்தில் வாசித்துக் காட்டப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

நீதிமன்றத்தை மீறியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்ததாவது.—

1984 ஜனவரி 25 ஆம் திகதி 1123 கிறெயின் கஞ்சா வைத்திருந்ததாக எச். எம். ரன்மெனிக்கா குற்றவாளியாகக் காணப்பட்டார். அவருக்கு கண்டி மாஜிஸ்திரேட் திரு. சந்திரதாச நாணயக்கார 2000 ரூபா அபராதம் விதித்தார்.

அபராதம் செலுத்தாத பட்சத்தில் 6 மாத கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

குற்றவாளி அவ்வேளை சிறைப் பாதுகாவலர்களின் பொறுப்பில் இருந்தார். அபராதத்தைச் செலுத்தாத பட்சத்தில் அவர் சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட இருந்தார்.

## வைத்திய அதிகாரிகளின் வெளிநடப்புத் தீர்மானம்

மையைப் பணம் படைத்தவர்கள் உணர்வதற்கு நோன்பு வாய்ப்பு அளிக்கிறது.

நோன்பு நோற்றவர் ஏழைகளுக்கான "ஸகாதுல் பித்ரா" என்னும் தர்மத்தைக் கட்டாயமாக வழங்க வேண்டும்.

அந்தத் தர்மத்தை வழங்கிய பின்னர் பெருநாள் கொண்டாடினால்தான் பலன் கிடைக்கும். தவறினால் நோற்ற நோன்பு இறைவனின் அங்கீகாரத்தைப் பெறாது.

ஏழைகளின் முகத்தில் எவன் ஒருவன் களிப்பைக் காண்கிறானோ அவன்தான் உண்மையில் பெருநாள் கொண்டாடியவன் ஆவான்.

ஏழைகளை மகிழ்விப்பவன் தானும் மகிழ்கிறான்; இறைவனின் அருளுக்கும் உரியவன் ஆகிறான்.

நோன்பு அனுஷ்டிக்கும் காலத்தில் ஐவேளைத் தொழுகை ஒழுங்காக நடைபெறுகிறது.

எந்நேரமும் இறை சிந்தனை உள்ளத்தை நிரப்புகிறது.

நல்லதையே செய்ய மனம் ஏவுகிறது.

இந்த வகையில் நோன்பு அனுஷ்டிப்பவர்கள் தம்மில் ஈகைப் பண்பை வளர்ப்பதோடல்லாமல் தம்மைப் பரிசுத்தப்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கிறது.

நோன்பு காலத்தில் மட்டும் இறை சிந்தனை இருந்தால் போதாது. ஈதுல் பித்ர் பெருநாளில் மட்டும் ஏழைகளுக்கு உதவி செய்வது என்றும் இருக்கக் கூடாது.

நோன்புக் காலத்தில் பெற்ற பயிற்சியும் அனுபவமும் நாளெல்லாம் இறைவனை நினைக்கவும் தொழவும் ஏழைகளுக்கு உதவவும் எமக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

## திருமலையில் போதி பூஜை

திருகோணமலை, ஜூன் 30

நாட்டினதும், மக்களினதும் நன்மை கருதி நடத்தப்படும் போதி பூஜை திருகோணமலை நகரில் நாளை 1ஆம் திகதி ஆரம்பமாகிறது.

திருகோணமலை ஜயசுமனராம விஹாரையில் ஆரம்பமாக உள்ள இப்போதி பூஜை 21 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

([illegible])

நான் பொலிஸ் பாதுகாப்பில் இருந்து கொண்டு தான் வந்திருக்கின்றேன். விசாரணை தொடங்கிய நாள் தொடக்கம் நான் நீதிமன்றத்துக்கு வந்திருக்கின்றேன்.

கடந்த 26 ஆம் திகதி சாட்சியம் அளிக்க வந்த வேளையில் பொலிஸார் நீதிமன்ற அலுவல்கள் பூர்த்தியானதும் என்னைக் கைது செய்தனர்.

சம்பவம் நடைபெற்ற 19 ஆம் திகதியன்று நான் பல்கலைக்கழகத்தில் தான் இருந்தேன். அன்று மாலை நாங்கள் சுமார் பத்துப் பேர் பேராதனைப் பக்கம் நடந்து சென்றோம். பரீட்சையில் சித்தி அடையத் தவறியவர்களும் எம்மோடு இருந்தார்கள்.

இரவு சுமார் 7 மணியளவில் பேராதனை சினிமாச்சாலைப் பக்கம் சென்ற வேளையில் அதன் அருகில் (பார்) மது விற்பனை நிலையம் ஒன்றிருந்தது.

அங்கு நாம் சென்றோம்- எம்முடன் மது அருந்துபவர்கள் இருந்தார்கள். என்னிடமும், சந்திரரத்னவிடமும் குடிப் பழக்கம் கிடையாது.

காலஞ் சென்ற பத்மசிறி பாருக்குச் செல்லவில்லை. பத்மசிறியை எனக்குத் தெரியும். இரவு சுமார் 9.00 மணியளவில் நாம் மீண்டும் பல்கலைக்கழகத்தை நோக்கி வந்தோம்.

மார்க்கஸ் பெர்னாண்டோ சாலைக்குச் செல்லும் குறுகிய பாதையின் ஊடாக அங்கு சென்றோம்.

பொலிஸ் நிலையத்தின் பின்புறமாக நாம் சென்று கொண்டிருக்கையில் எமது கூட்டத்தில் இருந்த ஒருவர் பொலிஸ் நிலைய ஜன்னலில் தற்செயலாகத் தட்டுப்பட்டார்.

அவர் லயனல் அழகக்கோன் என்பவராவார். பொலிஸார் எனக் கருதப்படும் நான்கு பேர் சிவில் உடையுடன் பொல்லுகளுடன் அப்பொழுது வெளியே வந்தார்கள்.

மாஜிஸ்திரேட்:- அவர்கள் பொலிஸாரா?

சாட்சி:- ஆம் அவர்கள் பொலிஸாராகத் தான் இருக்க வேண்டும். இவ்வாறு ஜன்னலில் மோதியவர்களை பொலிஸார் கைது செய்ய ஆயத்தமானார்கள்.

மாஜிஸ்திரேட்:- குடி வெறியினால் தான் இவ்வாறு மோதல் இடம் பெற்றதா?

சாட்சி:- அப்படி இருக்கலாம்.

கைது செய்ய முயற்சிக்கப்பட்ட வேளையில் பொலிஸாருக்கும், மாணவர்களுக்கும் இடையில் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. அப்பொழுது அவ்விடத்திற்கு பொலிஸ் நிலைய பொறுப்பாளர் வந்தார். நாம் அப்பொழுது பொலிஸ் நிலையத்

யத்தில் வைத்து போலி பாஸ்போர்ட்டுகள் சகிதம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண்கள் சிலரையே படத்தில் காண்கிறீர்கள்.

கட்டுநாயக்கா பொலிஸார் இவர்களை குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

(எ*ச)

## வடக்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த பிக்கு ஒருவரைத் தாக்க முற்பட்டனர். அந்த பிக்கு பயப்படாமல் இளைஞர்களை எதிர்த்தார். இளைஞர்கள் பின்வாங்கினர்.

இச்சம்பவம், வடக்கிலுள்ள ஆனைக்கோட்டை என்னும் இடத்தில் இடம்பெற்றது.

ஜப்பானிய தற்காப்பு முறையில் அந்த பிக்கு, இளைஞர்களை எதிர்த்தார். அதன் பின்னர், அருகில் உள்ள வீடு ஒன்றிலிருந்து துப்பாக்கி வெடித்தது.

உடனே அந்த பிக்கு, அந்த வீட்டின் முன்பாகப் போய் உட்கார்ந்து, பிரார்த்தனை செய்தார்.

பொலிஸார் வந்து அவரை அங்கிருந்து போகும்படி செய்தனர்

இவர் தெற்கிலிருந்து வடக்குக்கு, சமாதான பாத யாத்திரையை மேற்கொண்ட ஜப்பானிய பௌத்த பிக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

● (க)

## இருதய ஆண்டவர் வருடாந்த உற்சவம்

கொழும்பு, ஜூன் 30

இறத்தோட்டை திரு இருதய ஆண்டவர் வருடாந்த உற்சவம் நாளை 1 ஆம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்.

கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகிய இத்திருவிழா இன்று 30ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு வேஸ்பஸ் ஆராதனையுடனும் —

நாளை காலை 9.30 மணிக்கு திருநாள் பாடற்பூசை, திருச்சொரூப சுற்றுலா, திருச்சொரூப ஆசீர்வாதம் என்பவற்றுடன் முற்றுப் பெறும்.

(ஸ)

வைத்திய அதிகாரிகளின்

# வெளிநடப்புத் தீர்மானம்

## ஜனாதிபதி திரும்பும் வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 30

அரசாங்க வைத்திய அதிகாரிகள் ஒன்று முதல், இரண்டு மணி நேரம் வரை கடமைகளிலிருந்து வெளிநடப்புச் செய்வதென்ற தீர்மானம், ஜனாதிபதி நாடு திரும்பும் வரை பின்போடப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தற்போது வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கின்றார். அவர் நாடு திரும்பிய பின், அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு வழங்க ஆவன செய்யப்படும் என, சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்க வைத்தியர்களுக்கு சம்பள உயர்வும் இதர வசதிகளும் வழங்கப்படும் வரை, தினசரி ஒன்று முதல் இரண்டு மணி நேரம் வரை வெளிநடப்புச் செய்வதென அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்திருந்தது.

சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவுடன் பல முறை பேச்சுவார்த்தைகளை இச் சங்கம் நடத்தியிருக்கிறது.

சுகாதார அமைச்சரும், அரசாங்க வைத்தியத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என அமைச்சரவைக் கூட்டங்களில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், சம்பள உயர்வுகளை வழங்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் எதிரொலியாகவே அரசாங்க வைத்தியர்கள் வெளிநடப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்-

தற்பொழுது ஜனாதிபதி நாடு திரும்பிய பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருப்பதால் இவர்களது வெளிநடப்பு ஏற்பாடுகள் பின்போடப்பட்டிருப்பதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (எ-ய)

# ஈகைப் பெருநாள் வாழ்த்துக்கள்

### அபுசாலி

கொழும்பு, ஜூன் 30

புனித நோன்பை நிறைவேற்றி இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமையைப் பூர்த்தி செய்ததன் காரணமாக இன்று புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இத்திருநாளை முன்னிட்டு முஸ்லிம்களுக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

பலாங்கொடை நாடாளுமன்ற உறுப்பினரும் மகாவலி அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான அல்ஹாஜ் எம். எல். எம். அபூஸாலி நோன்புப் பெருநாளை முன்னிட்டு மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

இந்நாட்டில் கடந்த ஆயிரம் வருடகாலமாக முஸ்லிம்களாகிய நாம் சிங்கள, தமிழ் இன மக்களுடனே சமாதானமாகவும் ஐக்கியமாகவும் வாழ்ந்து வருகிறோம்.

துரதிர்ஷ்டவசமாக இன்று நாட்டில் பல்வேறு இனங்களுக்கு மத்தியில் ஐக்கியமின்மை நிலவி வருகிறது. அது மட்டுமன்றி அரசுக்கு எதிராகவும் பல்வேறு சக்திகள் இயங்கி தேசிய ஐக்கியத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் ஊறு விளைவிக்க முயற்சிக்கின்றன.

எனவே முஸ்லிம்களாகிய நாம் இத்திருநாளில் சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் உள்ள தப்பபிப்பிராயங்களை நீக்கி இன ஐக்கியத்துக்கு உதவ முன்வர வேண்டும்.

சகல விதமான நற்பாக்கியங்களையும் அல்லாஹ் இத்திருநாளில் அனைவருக்கும் நல்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் ஈத் முபாரக். (எ)

### பலீல்

பளீல் ஹாஜியார் நலன்புரிச் சங்கத்தின் ஆயுட்காலத் தலைவர் அல்ஹாஜ் ஏ. எம். பளீல் விடுத்துள்ள பெருநாள் ஆசிச் செய்தி.—

புனிதமிகு ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்ற தன் மகிழ்வைக் குறிக்குமுகமாக இறைவன் நமக்கு இந்த ஈகைத் திருநாளை ஈந்தருளினான். இத்தினம் எம் அனைவருக்கும் மங்கள தினமாக அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

மாண்புமிகு ரமழான் மாபெரும் பயிற்சியொன்றை எமக்கு வழங்கிவிட்டு விடைபெறுகிறது. ஒவ்வொரு மனிதனினதும் இதயத்தைப் பரிசுத்தப்படுத்தி இறையச்சம் நிறைந்ததாக நோன்பு மாற்றியமைக்கின்றது.

மனிதனின் உள்ளத்தையும், உடலையும் அல்லாஹ்வுக்காக அர்ப்பணிக்கக் கூடிய ஒரு நிலையினை நோன்பு ஏற்படுத்துகின்றது.

இப்புனித தினத்தில் உலகில் வாழும் நம் அனைத்து சகோதரர்களினதும் நல்வாழ்வுக்காக நாம் இறைவனிடம் பிரார்த்திப்போம்.

அல்லாஹ்வே நம் அனைவருக்கும் உனது கிருபையையும், மன்னிப்பையும் ஈந்து அருள் பாலிப்பாயாக! (எ)

## காப்புறுதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் சேதம் ஏற்பட்டிருக்கும்.

பிரஸ்தாப கூட்டுத்தாபனத்தில் அமைந்துள்ள தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியின் அலுவலகத்துக்கு கீழே உள்ள மலசலகூடத்திலேயே இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது. இது அவருக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் வைக்கப்பட்டிருக்கலாம் என நம்ப முடியாது.

இப்படி திரு. டக்ளஸ் லியனகே தெரிவித்தார்.

(த-க-மு)

## ஒபரோயில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் சக்தி வாய்ந்தது என்றும் தெரிய வருகிறது.

தேடப்படும் தம்பதியரைக் காட்டிக் கொடுப்போருக்கு பொலிஸார் வெகுமதி வழங்க முன் வந்திருக்கின்றனர்.

ஒரு பிரத்தியேக பொலிஸ் குழு, இந்த பயங்கர சம்பவத்தின் பின்னணியை துப்புத்துலக்குவதில் ஈடுபட்டிருக்கிறது.

இதே வேளை கோட்டை நீதிவான் ஜனுப் ஐ. எம். இமாம், வெடிகுண்டு விபத்தால் இறந்த

பில் இருந்தார். அபராதத்தைச் செலுத்தாத பட்சத்தில் அவர் சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட இருந்தார்.

இக்கட்டத்தில் லியனகே சிறில் அத்துமீறி, சட்டத்திற்கு மாறாக மாஜிஸ்திரேட்டைப் பயமுறுத்தி இருக்கிறார்.

கண்டி மாஜிஸ்திரேட்டின் அறிக்கையின்படி, தமது அறைக்குள் நுழைந்து பயமுறுத்தியவர் லியனகே சிறில் என அடையாளம் கண்டுள்ளார்.

லியனகே சிறில் பல கிரிமினல் வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சந்தேக நபர் தண்டனைக்கு எதிராகத் தாம் எதுவும் கூற இருக்கிறதா என நீதிமன்றம் கேட்ட போது, தாம் மூன்று பிள்ளைகளின் தந்தை என்றார்.

மேலும் ஐந்து வழக்குகளில் தண்டிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

கள்ளச் சாராயம் வடித்தது, கொள்ளையடித்தது போன்ற சம்பவங்களில் குற்றவாளியாகக் காணப்பட்டதாகக் கூறிய சந்தேக நபர் வன்செயல்களில் ஈடுபடவில்லை என்றும் கூறினார்.

முன்னைய குற்றங்களுக்கு 6 மாதங்கள், ஒரு வருடம், 15 மாதங்கள் என்ற அடிப்படையில் சிறைத்தண்டனை அனுபவித்ததாகவும் லியனகே சிறில் சொன்னார்.

(எ-ய)

## திஸ்ஸமராம...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் நீதிமன்றத்தின் முக்கிய பகுதிகளுக்கு அவர்கள் தீவைத்து விட்டுத் தலைமறைவாகினர்.

நீதிமன்ற தஸ்தாவேஜுகள் அறை, தடயப் பொருள்கள் வைத்திருந்த அறை உட்பட சகல அறைகளும் முற்றாக எரிந்து சாம்பலாகின.

இது பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

தீக்காயங்களுடன் காணப்பட்ட ஒருவரைச் சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்தனர்.

அந்த நபர் இப்பொழுது பொலிஸ் பாதுகாப்புடன் திஸ்ஸமாராமை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பொலிஸார் மற்றும் சில சந்தேக நபர்களைத் தேடி வருகின்றனர்.


இது தொடர்பாக அம்பாந்தோட்டை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. கே. ஹெட்டிஆராச்சி தலைமையில் பொலிஸ் கோஷ்டி விசாரணை நடத்தி வருகிறது.

(த-மு)

பெண்ணின் மரணம் கொலை எனத் தீர்ப்பளித்தார்.

(த-ங)

கந்தப்பு வாத்தியார்: செல்வா




அமெரிக்காவில்

## மது அருந்த அனுமதி வயது 21 ஆக உயர்கிறது

வாஷிங்டன், ஜூன் 29

அமெரிக்காவில் மது அருந்துவதற்காக அனுமதிக்கப்படும் குறைந்த பட்ச வயதெல்லையை 21 ஆக உயர்த்தும் சட்ட வரைவு ஒன்றை அமெரிக்க நாடாளு மன்றம் நேற்று நிறைவேற்றியது. மது போதையில் வாகனங்களை ஓட்டிச் செல்லும் போது ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

இந்த சட்ட வரைவு ஜனாதிபதி றேகனின் அங்கீகாரத்தைப் பெற அனுப்பப்பட்டுள்ளது. இந்த சட்ட வரைவை ஜனாதிபதி வெகுவாக ஆதரிப்பதாக தெரிகிறது.

இரண்டு வருடங்களுக்குள் இந்த வயதெல்லையை ஸ்திரப்படுத்தாத மாநிலங்களுக்கு கொடுக்கப்படும் வீதிச் செலாவணியில் 5 முதல் 10 சத வீத குறைப்பை மேற்கொள்ள இந்த சட்ட வரைவு வழி செய்கிறது.

அமெரிக்காவின் 50 மாநிலங்களில் அரைவாசி தற்போது இந்த குறைந்த பட்ச வயதெல்லையை செயல்படுத்தி வருகின்றன. மற்றையவைகளில் 18 முதல் 20 வரை வயதெல்லை வித்தியாசப்படுகிறது. (ந)

## சுலக்ஷன ஒரு பேராசிரியை!

சுலக்ஷன கதாநாயகியாக நடிக்க, ஸ்ரீவள்ளியம்மாள் பிக்சர்ஸ் நிறுவனம் "கார்



சுலக்ஷண

காலம்" என்ற பெயரில் படம் தயாரிக்கிறது.

கல்லூரி மாணவன் — மாணவியான இளம் ஜோடியின் காதலை வெற்றி பெறச் செய்யும் பேராசிரியை வேடத்தில் நடிக்கிறார்; சுலக்சனா!

காதல் ஜோடியாக புது நடிகர் மனோஜ்கிதன், புதுநடிகை செந்தூரி நடிக்க சாமிக்கண்ணு, லியோபிரபு, லூஸ் மோகன், பிரபு, ராஜா, நடிக்கிறார்கள்.

இந்தப் படத்தில் பேராசிரியர் நன்னன் குணச்சித்திர வேடம் ஒன்றில் அறிமுகமாகிறார்.

சந்திரபோஸ் இசையமைக்க தர்மா ஒளிப்பதிவு செய்கிறார். டி. புகழேந்தி கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார்.

இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்குகிறது. (ஜூ-10)

## 'சிவகங்கை சிங்கத்துக்கு' ஒரு பாடல்

எஸ். எஸ். மூவிஸ் சிவகங்கை சிங்கம்" படத்திற்காக வாலி எழுதிய பாடலொன்று ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

"காலேஜி அம்மாக்களோ கண்பட்ட மென் பூக்களோ கன்னி அரும்போ கொஞ்சும் உடம்போ யம்மா யம்மா இன்ப ஒய்யாரம் யம்மா யம்மா உல்லாச நேரம் யம்மா யம்மா" என்று தொடங்கும்

'வைதேகி

## பூர்ணிமாவுடன் நரேஷ் நடிக்கும் புதுப் படம்

ஏரிஸ் சினி ஆர்ட்ஸ் பட நிறுவனத்தார் நரேஷ்குமார் — பூர்ணிமா இணைந்து நடிக்கும் படம் ஒன்றை தயாரிக்கிறார்கள். இதன் துவக்க விழா பாடல் பதிவுடன் ஏவி. எம்மில் நடந்தது.

"மனம் கவர்ந்த மன்னவனே மலர் எழுதும் கடிதமிது. உன்னைப் பார்த்து ஒரு பேதை மகள் பரிதவிக்கும் சேதியிது" என்ற வைரமுத்துவின் பாடலுக்கு கங்கை அமரன் இசை அமைத்தார். எஸ். ஜானகி பாடினார்.

மவுலி திரைக்கதை — வசனம் எழுதி இயக்கும் இந்த படத்



பூர்ணிமா

இல் மனோரமா, ஒய். ஜி.

# மே. வங்கத்தில் 10 லட்சம் பேர் வீடு இழப்பு

## மீட்பு பணியில் ஆயுதப் படையினர்

புதுடில்லி, ஜூன் 29

இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 10 லட்சம் பேர் தமது வீடுகளை இழந்துள்ளனர். ஆயுதப் படையினர் விசைப்படகுகள் மூலம் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தாரக்கேஸ்வர், இலம்புசார் ஆகிய நகரங்களில் மீட்பு நடவடிக்கைகள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு

அதேவேளை 11 பேர் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டனர். 9 பேர் படகொன்று புரண்டதனால் உயிரிழந்தனர்.

டார். கடந்த ஆறு வருடங்களில் ஏற்பட்ட மோசமான வெள்ளப்பெருக்கு இதுவென அவர் நிருபர்களிடம் கூறி

னால் ஏற்பட்ட நட்டம் சுமார் 3000 லட்சம் ரூபாவாக இருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

நாளை இந்த ரயில் சேவை ஆரம்பமாகவிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் 3 கிழக்கு மாகாணங்கள் வெள்ளத்தால் பாதிக்

## மண்சரிவில் ஒருவர் மரணம்

குமமோடோ, ஜப்பான், ஜூன் 29

கடந்த சில நாட்களாக ஜப்பானில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் ஜப்பானின் தென் மேற்குப் பகுதியிலுள்ள இட்சுகு கிராமத்தில் மண் சரிவு ஏற்பட்டது. இதில் ஒரு பெண் கொல்லப்பட்டார். 13 பேர் காணமற் போனதாக அறிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து பெய்து வரும் மழையில் 300க்கும் அதிகமான பொலீஸ், இராணுவ, நிவாரண அதிகாரிகள் காணமற் போனவர்களைத் தேடி வருகின்றனர். (ந)

## 'வைதேகி காத்திருந்தாள்'

அப்பு மூவீஸ் தயாரிக்கும் படத்துக்கு "வைதேகி காத்திருந்தாள்" என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது.

இந்தப் படத்தில் விஜயகாந்த், ஊர்வசி, ரேவதி, சுலோசனா மற்றும் பலர் நடிக்கிறார்கள். ஆர். சுந்தரராஜன் கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார். இசை: இளையராஜா. ஒளிப்பதிவு: ராஜராஜன்.

காரைக்குடியை அடுத்துள்ள ஆத்தங்குடியில் படப்பிடிப்பு நடக்கிறது. பஞ்சு அருணாசலமும், எம். எஸ். அக்பரும் சேர்ந்து தயாரிக்கும் படம், "வைதேகி காத்திருந்தாள்"

(ம-10)

இன்ப ஓய்யாரம் யம்மா யம்மா உல்லாச நேரம் யம்மா யம்மா" என்று தொடங்கும் அந்தப் பாடலை எஸ். பி. பால சுப்பிரமணியமும், வாணி ஜெயராமும் பாடினார்கள்.

சிரஞ்சிவி இரட்டை வேடம். அவருக்கு இணையாக எம். ஆர். ராதிகா, மாதவி இருவரும் நடிக்கிறார்கள்.

ஜெயமாலினி, விஜயலட்சுமி ஆகியோரும் நடிக்கும் இப்படத்தை கோடி ராமகிருஷ்ணா இயக்குகிறார்.

(ஜூ—10)

பூர்ணிமா

தில் மனோரமா, ஒய். ஜி. மகேந்திரன், வினு சக்கரவர்த்தி, மவுலி ஆகியோர் நடிக்கிறார்கள். ஒளிப்பதிவு தேவிபாலா.

(ஜூ—10)

தினபதி சினிமா

## "புலிக்குப்புலி"

"முத்தமிடும் நேரம், வெளிச்சப்பட வேண்டும்" என்று தொடங்கும் ஒரு பாடல் சுங்கா சினி ஆர்ட்ஸ் "புலிக்குப்புலி" படத்தில் இடம் பெறுகிறது. மதுரை ஜே. பத்மநாபன் எழுதிய இந்தப் பாட்டை மலேசிய வாசுதேவனும், வாணி ஜெயராமும் பாடி உள்ளனர். சிரஞ்சீவி, கீதா, சௌகார் ஜானகி, ஜெயமாலினி மற்றும் பலர் இதில் நடிக்கிறார்கள்.

(ம-10)

புசார் ஆகிய நகரங்களில் மீட்பு நடவடிக்கைகள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு ஆயிரக் கணக்கானோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டனர். 9 பேர் படகொன்று புரண்டதனால் உயிரிழந்தனர்.

மாநில முதல் மந்திரி வெள்ளப் பிரதேசத்தை பார்வையிட்

வெள்ளப்பெருக்கு இதுவென அவர் நிருபர்களிடம் கூறினார்.

கல்கத்தாவில் கங்கை நதி கடலுடன் கலக்கும் இப்பிரதேசம் இந்தியாவில் வெள்ளப் பாதிப்புக்கு அடிக்கடி உள்ளாகும் பிரதேசமாக இருந்து வருகிறது.

கல்கத்தா நகரில் புதிய பூமிக்கடியிலான ரயில் சேவை வெள்ளத்தினால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இத

மேலும் 3 கிழக்கு மாநிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பீகார், உத்தரப்பிரதேசம் அஸ்ஸாம் ஆகியவையே இந்த 3 மாநிலங்களாகும்.

இந்தியாவிலும், வங்காள தேசத்திலும் இந்த மாதம் வெள்ளத்தினால் 220 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

(ந)

போதைவஸ்து சட்டம்:

# மலேஷியாவில் 425 பேருக்கு

## மரணதண்டனை விதிக்கப்படலாம்

கோலாலம்பூர், ஜூன் 29

மலேஷியாவில் திருத்தியமைக்கப்பட்டுள்ள பயங்கர போதை வஸ்துக்கள் சட்டத்தின் கீழ் 425 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம்.

உள்ளக அமைச்சர் மூஸா ஹிதம் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் திருத்தியமைக்கப்பட்ட இந்த சட்டத்தின் கீழ் 15 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவு ஹெரோயினை வைத்திருக்கும் ஒருவர் போதை வஸ்து கடத்துபவராகக் கருதப்படுகிறார். இவருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம்.

போதை வஸ்து கடத்தல்காரர்கள் என்ற சந்தேகத்தின் கீழ் தற்போது 425 பேர் விசாரணைகளை எதிர்பார்த்த வண்ணம் சிறையிலுள்ளனர்.

1975இல் போதை வஸ்து கடத்தல் குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கும் சட்டம் அமுலுக்கு வந்தது. அதன் பின் இதுவரை 24 போதை வஸ்து கடத்தல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை நியமிக்கப்பட்டுள்ள 33 பேர் தமது அப்பீல் முடிவுகளை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர். மேலும் 230 பேர் பலதரப்பட்ட போதை வஸ்து குற்றங்களுக்காக ஆயுள் தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

(ந)


வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

**அஹ்மது கம்பனி,**

மொத்த — சில்லறை ஜவுளி வியாபாரிகள்,
151, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு — 11.
டெலிபோன்: 29414 தந்தி: "அஹ்மதுகோ."
28010.



நவின முறைப்படி

**ஆங்கிலம் பேச**

5 மாதங்களில் பயிற்சியளிக்கப்படும்

★ இலக்கண அடிப்படையில்
★ வாய்மொழி மூலம் பேசப் பழகுதல்

**கொம்பனித் தெரு,**

கொழும்பு பௌத்த கல்லூரி, ரியோ சினிமா முன்னால் சனிக்கிழமை மாலை 5-30 — 8-00 வரை
ஆரம்பம் — ஜூலை மாதம் 7 ஆம் திகதி

**பேருவலை,**

"ஜயமக" கல்வி நிலையம், புகையிரத வீதி.
திங்கள் — பி. ப. 12-30 — 2-30 வரை
ஆரம்பம் — ஜூலை மாதம் 9 ஆம் திகதி.
ஆசிரியர் — 20 வருட அனுபவமுள்ள

**வீ. ராமநாராயண**


## தாய், —லாவோஸ் எல்லையில் படை குவிப்பு

தாய்லாந்தும், லாவோஸும் தமது பொது எல்லையில் படைகளைக் குவித்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எல்லைப்புறத்தில் 3 கிராமங்களின் உரிமைப் பிரச்சினை தீர்க்கப்படாமை இதற்குக் காரணமாக கூறப்படுகிறது.

(ந)

## 15 பேர் மரணம்

இஸ்லாமாபாத், ஜூன் 29

பாகிஸ்தானின் தென் மேற்கு மாநிலமான பலுகிஸ்தானின் குஸ்டார் நகரில் ஏற்பட்ட பஸ் விபத்தொன்றில் 15 பிரயாணிகள் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமுற்றனர்.

(ந)

இந்திய — பாக்.

# எல்லைச் சண்டை:

## பல வீரர்கள் மரணம்

புதுடில்லி, ஜூன் 29

காஷ்மீர் எல்லைப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் எல்லைச் சண்டையின் போது கடந்த பத்து நாட்களில் ஒரு இந்திய எல்லைப் பாதுகாப்பு வீரரும், பல பாகிஸ்தானிய எல்லைப் புற வீரர்களும் கொல்லப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் நேற்றுக் கூறினர்.

இந்திய அதிகாரிகளின் கூற்றுப்படி பாகிஸ்தானிய வீரர்களே முதலில் தாக்குதலை மேற்கொண்டனர். காஷ்மீரில் இந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தின் மீதே இந்த தாக்குதல் இடம்பெற்றது. லடாக் மாவட்டத்திலுள்ள துருப்ரா கிராமத்திலேயே வீரர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானிய வீரர்கள் அதிகளவில் உயிரிழந்ததாக இந்திய அதிகாரிகள் கூறினர்.

உலகின் இரண்டாவது உயர்ந்த மலைப்பிரதேசமாகக் கருதப்படும் இப்பகுதியில் எல்லைச் சண்டைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக இந்திய அதிகாரிகள் மேலும் கூறினர்.

(ந)


நோன்புப் பெருநாள்
நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

இந்தத் திருநாளில் எமது வாடிக்கையாளர்கள், வழமையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் ஈத் முபாரக் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

**ஹாஜா ரெஸ்டுரன்ட்**

65 — 67, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு — 11.
(கோட்டை ரயில் நிலையத் துக்கு முன்னிலையில்).
டெலிபோன்: 547596



நீண்ட காலம் உழைக்கும் இரட்டை போல் பெயாரிங்ஸ்

**ஊஷா சீலிங் மின் விசிறிகள்**

140 செ. மீ. (56") ரூபா. 1475/-

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு.

**ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்**

88A, மெயின் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி: 25060—26643



ஈத் பெருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும்
எமது வாடிக்கையாளர்களுக்கும்
உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

எங்களிடம் அலுமினிய, பித்தளைப் பாத்திரங்கள், வாளி, செம்புத் தகடு, தாயத்துக்கூடு (சுரை), கத்திகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**M. M. OSMAN & SONS**

(இறக்குமதியாளர்களும், பிரபல விற்பனையாளர்களும்)
16 — ஏ, டேம் வீதி — கொழும்பு - 12.
தொலைபேசி:- 549863

## முருங்கனில் பயிற்சி வகுப்பு

தலைமன்னார், ஜூன் 29

முருங்கன் ஜீவோதயம் பண்ணையில் 60 யுவதிகளுக்கான சுய தொழில் வேலை வாய்ப்புப் பயிற்சி வகுப்பை நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. மரியதாசன் குரூஸ் ஆரம்பித்து வைத்தார்.

இவ் வைபவத்திற்கு மன்னார் முருங்கன் மெதடிஸ்த சேகர குரு ஜெயரத்தினம் தலைமை தாங்கினார்.

இப்பயிற்சி வகுப்பு ஜீவோதயம் பண்ணை முன்னேற்றத்துக்காக உழைத்து அண்மையில் காலஞ்சென்ற திருமதி பிறிஜெட் ஜெயராசசிங்கம் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது.

(எ—286)

## மிருக வைத்தியர் இன்றி அவதி

இராகலை, ஜூன் 29

இராகலைப் பகுதியிலுள்ள ஒரேயொரு அரசாங்க மிருக வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாததால் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களாக லீவில் சென்றுள்ள இராகலை மிருக வைத்தியர் இன்னும் திரும்பாததால் அவசர சிகிச்சை பெறுவதற்கு இராகலையில் இருந்து சுமார் 14 மைல்கள் தூரத்திலுள்ள நுவரெலியா மிருக வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியிருக்கிறது.

(எ—265)


தினபதி சிறு விளம்பரம்

### வாழ்த்துக்கள்

பாரிஸ்டர் ஹமவி ஹனிபா (கொழும்பு) நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தமது ஈத் வாழ்த்தினை தெரிவிக்கிறார்.

033209

### ஹோட்டல் வேலை


பஞ்சாப் விவகாரத்தைக் காட்டி

# இ. காங்கிரஸ் எம்மை அடக்க நினைக்கிறது

## பணிந்துவிடமாட்டோம் என்கிறார் காளிமுத்து

மதுரை, ஜூன் 29

"பஞ்சாப் விவகாரத்தைக் காட்டி இ. காங்கிரஸ் எம்மை அடக்க நினைக்கிறது. இப்படியெல்லாம் எங்களை பணிய வைக்க முடியாது."

இவ்வாறு இ. காங்கிஸாருக்கு அமைச்சர் காளிமுத்து கூறினார்.

மதுரை நகர் மாவட்ட இ. காங்கிரஸ் தலைவர், எம். கே. ராமகிருஷ்ணன் ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:—

கோவிலை கொடியவர்களின் கூடாரமாக மாற்றி, ஒன்றும் அறியாத மக்களை கொன்று குவித்து வந்த சீக்கிய தீவிரவாதிகளின் கொட்டத்தை இந்திரா காந்தி அடக்கி விட்டார். தமிழகம் பஞ்சாப்பாக மாறும் என்று பேசுபவர்கள் / பிந்தரன்வாலே ஆக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்நிய நாட்டின் ஆயுதங்கள் சீக்கிய தீவிரவாதிகளுக்கு கிடைத்திருக்கிறதே; இந்திரா காந்தி பஞ்சாப் கலவரத்தில் அந்நிய தலையீடு இருக்கிறதென்று கூறிய போது கேலி பேசியவர்கள், இப்போது வாய்மூடி மௌனியாக உள்ளனர்.

இந்திரா காந்தி எதிலும் அவசரப்படுவதில்லை. ஆத்திரப்படுவதும் இல்லை. அமைதியாக பிரச்சினையைப் பேசித் தீர்க்க இயலாத நிலையில் அழுத்தமான நடவடிக்கைகளில் இந்திரா இறங்குவர் என்பதற்கு பஞ்சாப் ராணுவ நடவடிக்கை இன்னுமோர் எடுத்துக்காட்டு.

### ராணுவ விசாரணை

சரணடைந்த அகாலி தலைவர் லோங்கோவால் மற்றும் தீவிரவாதிகள் ராணுவ கோர்ட்டின் முன்னால் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும்.

ரத்தப்பசி எடுத்தலைகின்ற தீவிரவாதிகள் இந்தியாவின் எந்தப் பகுதியிலும், எந்த வழியிலும் தலையெடுக்கா வண்ணம் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சீக்கியர் தம் பொற் கோவிலின் புனிதத்தை இந்திரா காந்தி காத்திருக்கிறார்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

தி. மு. க. தலைவர் கருணாநிதி மற்றும் அமைச்சர் காளிமுத்து இருவருக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் எச்சரிக்கை விடுக்கும் வகையிலும் இ. கா. சார்பில் மதுரையில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"தமிழர்களை புறக்கணித்து பஞ்சாப் போல் ஆக்கி விடாதீர்கள் என்று கருணாநிதியும், அமைச்சர் காளிமுத்துவும் பல்வேறு கூட்டங்களில் பேசி வருவதன் விளைவாக இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

சுவரொட்டியில் எழுதப்பட்டுள்ள வாசகம் வருமாறு:—

"ஜெய்ஹிந்த்! பிரிவினைவாதிகளே திரும்பிப் பாருங்கள். கையாலாகாத கருணாநிதியே, கருங்காலி காளிமுத்துவே, பேச்சுக்கு பேச்சு தமிழகத்தை பஞ்சாப் ஆக்குவோம் என முழக்கமிடும் ஈனர்களே! பஞ்சாப்பை சற்று திரும்பிப் பாருங்கள்" என்று எழுதப்பட்டுள்ளன.

இதற்குப் பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் காளிமுத்து ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:—

### அரசியல் பேதமை

அ. தி. மு. க. தமிழகத்தில் நடந்து முடிந்த தேர்தல்களில் இந்திரா காங்கிரஸோடு அரசியல் உடன்பாடு கொண்டு இருந்ததாலேயே மத்திய அரசு தமிழகத்திற்கு இழைக்கும் அநீதிகளுக்கும் ஓரவஞ்சக நடவடிக்கைகளுக்கும் துணையாக இருக்கும் என்று கருதுவது அரசியல் பேதமை.

தமிழகம் தன்னாட்சி பெற வேண்டும் என்பது அ. தி. மு. க.வின் அடிப்படைக் கொள்கை.

அந்தக் கொள்கைக் குரலை — தமிழகத்தின் உரிமைக் குரலை — மைய அரசின் அதிகார குவிப்பை எதிர்க்கும் போர்க் குரலை எங்கள் இயக்கம் எப்போதும் ஒலித்துக் கொண்டு தான் இருக்கும். வெறும் அரசியல் உடன்பாட்டுக்காக நாங்கள் இதயத்தை ஏலம் போட மாட்டோம்.

பஞ்சாப் நடவடிக்கையைக் காட்டி தமிழகத்தின் உரிமைக்காக வாதிடுவோரை அச்சுறுத்தும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

மத்திய அரசின் ஆதிக்கப் போக்கைக் கண்டிப்பவர்களை இப்படி பூச்சாண்டி காட்டுவதன் மூலம், அவர்களுக்கு பிரிவினை வண்ணம் பூசுவதன் மூலம் பயமுறுத்தியே பணிய வைக்கலாம் என்று கருதினால் அந்த அரசியல் அறிவிலிகளுக்கு அனுதாபம் தெரிவிப்பதை தவிர வேறு வழியில்லை.

### சாகத் தயார்

காளிமுத்துவுக்கு பிந்தரன்வாலே கதிதான் ஏற்படும் என்று சில அரை வேக்காடுகள் அறிக்கை விடுகின்றன. திராவிட இயக்க லட்சியத்தை ஒழிப்பதற்காக அப்படி ஒரு சாவு வருமென்றால் அதை சிரித்த முகத்தோடு ஏற்றுக் கொள்ளத் தயார்.

இப்படிப்பட்ட மிரட்டல்களால் நான் பயப்படவும் மாட்டேன். பணியவும் மாட்டேன். மத்திய அரசின் ஆதிக்க போக்கிற்கு எதிராக ஏற்றிய போர்க் கொடியை இறக்கவும் மாட்டேன். லட்சியக் கூர்மையை மழுங்க விடவும் மாட்டேன்.

இவ்வாறு காளிமுத்து அறிக்கையில் கூறியிருக்கிறார்.

(ல—10)

செயற்கை முறையில்

## கால்நடை சினைப்படுத்தும் முறைபற்றி பயிற்சி அளிக்குக

### 25 பேரைத் தெரிவு செய்யக் கோரிக்கை

செயற்கை முறை சினைப்படுத்துதலில் மூலம் கால்நடைகளின் தரத்தை உயர்த்தலாம். கால்நடை திணைக்களத்தின் உதவியுடன் வெவ்வேறு சுறை கால் நடைப் பண்

கிழமைகளில் கூட வேண்டும்.

இச் சந்தைக்கு விற்பனைக்கு வரும் கால் நடைகள் நோயற்றவை என்பதை உறுதிப்படுத்தி பத்திரம் வழங்க வசதியாக ஒரு மிருக வைத்திய அதிகாரி இச் சந்தையில் இருக்க வேண்டும்.

உயிலங்குளம் விவசாய சேவை நிலையத்தில் வாரத்தில் ஒருநாள் மிருக வைத்திய அதிகாரியின் நடமாடும் அலுவலகம் அமைய வேண்டும்.

எருக்கலம் பிட்டியில் திட்ட அமுலாக்குல் அம்மச்சின் மகளிர்

## கிராமந்தோறும் கிளைகள் அமைப்பது ஏன்?

### சர்வோதய இணைப்பாளர் விளக்கம்

சாய்ந்தமருது, ஜூன் 29

இளைஞர்கள் நல்ல சிந்தனைகளை வளர்த்து நாட்டுப் பற்றுடன் வாழ வேண்டும். அத்துடன் சமூக சேவையிலும் ஈடுபட வேண்டும். இந்த நோக்கத்

டல் உத்தியோகத்தர் அலுவலக முன்றலில் நடைபெற்ற மேற்படி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## செய்தித் திரட்டு

### சிரமதானம்

புங்குடுதீவு, ஜூன் 29

புங்குடுதீவின் வட கரையோரமாக ஊரதீவு பாணாவிடை சிவன் கோவில் வரை வீதியொன்றினை அமைக்கும் சிரமதானப் பணி மீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது.

இவ் வீதியமைப்பு வேலையின் ஒரு பகுதி கடந்த ஆண்டு பூர்த்தியடைந்தது. இதன் இரண்டாம் கட்ட வேலைகளே தற்போது நடைபெறுகின்றன.

(ல—240)

### புனரமைப்பு

பேசாலை, ஜூன் 29

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பண்டிவிரிச்சான் பாசன குளம் 50 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படும்.

இத்துடன் கூத்தாடி திட்டத்தின் கீழ் 150 ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தியை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

(ல—251)

### சாரதி நசுங்கி மரணம்

சாவகச்சேரி, ஜூன் 29

வீதியில் சென்று கொண்டிருந்த லொறி ஒன்று திடீரென வயலினுள் புரண்டு விழுந்ததால் சாரதி அவ்விடத்திலேயே நசுங்கி மரணமானார்.

இச்சம்பவம் கல்வயல் பெருங்குளம் சந்திக்கு அருகாமையில் நடந்தது.

லொறியில் சென்ற மேலும் நால்வர் படுகாயங்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

(ல—51)

### கருத்தரங்கு

பொத்துவில், ஜூன் 29

அம்பாறை மாவட்ட சுகாதார சேவைகள் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இக்கருத்தரங்கு தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

அம்பாறை மாவட்டத்தில்

## ஹோட்டல் வேலை

திறமை வாய்ந்த ஹோட்டல் நிருவாகிகள், சிட்டை இலிகிதர்கள், அனுபவம் வாய்ந்த வெயிட்டர்கள், ரொட்டி, அப்பம் தயாரிப்பவர்கள் முதலானோர் உடன் தேவை. பின்வரும் முகவரிக்கு அடையாள அட்டையுடன் 07/07/84 காலை 10-00 மணி முதல் பி. ப. 4-00 மணி வரை நேரில் வரவும். ஹோட்டல் டீ இக்பால், 44, கோட்டடி வீதி, கொழும்பு-12.

033422

## அரசாங்க அறிவித்தல்

1964ஆம் ஆண்டின் 28ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத். 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல: அத் 1/419

கீழ் காணும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருக்கின்றது. மேலதிக விவரங்களுக்கு 1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதிய 302/30 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேஷ வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

அட்டவணை

உதவி அரசாங்க அதிபர்:- கொழும்பு.

அமைவு:- கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் புளுமெண்டோல் வட்டார இல. 6.

கிராமத்தின் பெயர்:- கொட்டாஞ்சேனை.

காணியின் பெயர்:- வரி மதிப்பு இலக்கங்கள் 637, 637/5, 637/6, 637/11, 643, 649 ஸ்ரீமா பண்டார நாயக்கா மாவத்தை.

துண்டு இல:- 1.

பூர்வாங்க பட இலக்கம் கொ:- 6180.

எச். சீ. குணவர்தன,
மாவட்ட காணி அலுவலர்,
காணி கொள்வனவு உத்தியோகத்தர்,
கொழும்பு மாவட்டம்.
கச்சேரி, கொழும்பு.
1984/யூன்/18.

1597

திணைக்களத்தின் உதவியுடன் வெவ்வேறு சறை கால் நடைப் பண்ணையில் 25 கால் நடைச் சொந்தக்காரர்களுக்கு இது பற்றி இரண்டு வாரகால பயிற்சியளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மன்னார் மாவட்ட கால் நடை அபிவிருத்தி தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டம் மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா. செந்தில்நாதன் தலைமையில் மன்னார் பட்டின சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:—

செயற்கை முறை சினைப்படுத்தலுக்கான கால அட்டவணையை சனிக்கிழமைகளில் உயிலங்குளத்திலும், செவ்வாய்க்கிழமைகளில் ஆண்டான் குளத்திலும், வியாழக்கிழமைகளில் ஆட்காட்டி வெளியிலுமென மிருக வைத்திய அதிகாரி தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உயிலங்குளத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கால் நடைச் சந்தை மாதத்தில் இரண்டு சனிக்... என்பதை உறுதிப்படுத்து பத்திரம் வழங்க வசதியாக ஒரு மிருக வைத்திய அதிகாரி இச் சந்தையில் இருக்க வேண்டும்.

மன்னார் மிருக வைத்திய அதிகாரியின் வதிவிடமும், வைத்திய சேவை நிலையமும் மன்னார் தலைமன்னார் வீதியில் எழுத்தூர் சந்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

நடமாடும் அலுவலகம் அமைய வேண்டும்.

எருக்கலம் பிட்டியில் திட்ட அமுலாக்கல் அமைச்சின் மகளிர் பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் விசேட ஆடு வளர்ப்புக்கு போதிய வைத்திய வசதியளிக்க வேண்டும்.

இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. (ல-251)

டுப் பற்றுடன் வாழ வேண்டும். அத்துடன் சமூக சேவையிலும் ஈடுபட வேண்டும். இந்த நோக்கத்திலேயே பின் தங்கிய கிராமங்கள் தோறும் கிளைகளை ஆரம்பித்து சேவையாற்றி வருகிறோம்.

அகில இலங்கை சர்வோதய சிரமதான இயக்கத்தின் கல்முனை பிரதேச இணைப்பாளர் திரு கே. பன்னீர்ச் செல்வம் இவ்வாறு கூறினார்.

சாய்ந்தமருது 6 ஆம் குறிச்சியில் அகில இலங்கை சர்வோதய சிரமதான் இயக்கத்தின் கிளை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருதிலுள்ள பயிரி... கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சாய்ந்தமருது 6 சர்வோதய சிரமதான இயக்கக் கிளைத் தலைவர் ஜனாப் எம். எஸார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. பன்னீர்ச் செல்வம் தொடர்ந்து பேசியதாவது:—

நாட்டில் நிலவும் சகல பிரச்சினைகளையும் அரசாங்கமே தீர்த்து வைக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்க கூடாது.

இயன்ற வரை இளைஞர்கள் இவற்றைத் தீர்த்துவைக்க முன் வர வேண்டும். நாம் நல்ல சிந்தனைகளுடனும், சமுதாயப் பற்றுடன் வாழ்ந்து ஏனையவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.

சமூக சேவையில் நாட்டம் கொண்டு மற்றவர்களையும் இச் சேவையில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும்.

மக்கள் மத்தியில் அமைதி ஏற்பட்டு அவர்களின் வாழ்வு மலர வேண்டும். இதற்கு இளைஞர்களின் சேவை முக்கியம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இக் கூட்டத்தில் ஜனாப் எம். எஸார், பயிரிடல் உத்தியோகத்தர் ஜனாப் யூ. எல். எம். ராஸீக் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்கள்.

(ல-281)

...கும்.

இக்கருத்தரங்கு தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள் ஆகியோர் இக் கருத்தரங்கில் பங்குபற்றுவர். இவர்களுக்கு தாய் சேய் நலம் பற்றி தமிழ் மொழி மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

(ல-247)

## பெயர் மாற்றம்

வவுணதீவு, ஜூன் 29

மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை, கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இப் பெயர் மாற்றம் தொடர்பாக கல்விப் பணிப்பாளர் திரு. ரி. டி- ஹஹன் சகல திணைக்களங்களுக்கும் அறிவித்திருக்கிறார்.

(ல-318)

## போட்டி

சித்தன்கேணி, ஜூன் 29

மூளாய் இந்து சமய மன்றம் சிறார்களிடையே சமய அறிவை மேலோங்கச் செய்யும் வகையில் இந்து சமயப் போட்டிகளையும் பரீட்சைகளையும் வருடந்தோறும் நடத்தி வருகின்றன.

கடந்த 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இம் மன்றம் போட்டிகளிலும், பரீட்சைகளிலும் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்குவதற்காக மன்றப் புரவலர்களை ஏற்படுத்தி வருகின்றது.

(ஜ-283)

## சினக்குடாவில்

சினக்குடா, ஜூன் 29

சினக்குடா மக்குளூற்று மஸ்ஜிதுல் முனவ்வரா ஜும்மா பள்ளி வாசல், நாச்சிக்குடா அல் மதுரஸத்துல் ஷஹ்ரியா தைக்கா பள்ளி வாசல் ஆகியவற்றில் புனித லைலத்துல் கத்ர் இரவை முன்னிட்டு பல விஷேட நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

மக்குளூற்று மஸ்ஜிதுல் முனவ்வரா பள்ளி வாசல் நிகழ்ச்சிகள் மௌலவி ஜே. எம். ஹுசைன்தீன் தலைமையிலும் நாச்சிக்குடா தைக்கா பள்ளி வாசல் நிகழ்ச்சிகள் மௌலவி பீ. அப்துல் பரீத் தலைமையிலும் நடைபெறும்.

(ஜ-54)

மகாபொல புலமைப் பரிசில்:

# கல்முனை சாஹிரா கல்லூரியில் 31மாணவர் தெரிவு

சாய்ந்தமருது, ஜூன் 29

கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் ஜீ. சி. ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 31 மாணவர்கள், மகாபொல புலமைப் பரிசில் பெறத் தகுதியுடையவர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

1982 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ. சி. ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் இக்கல்லூரியில் 67 மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர். இவர்களில் இருந்தே இந்த 31 மாணவர்களையும் அரசு தெரிவு செய்திருக்கிறது.

1980ஆம் ஆண்டில் 7 மாணவர்களும், 1981ஆம் ஆண்டில் 12 மாணவர்களும் இக்கல்லூரியிலிருந்து மகாபொல புலமைப் பரிசில் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வருடாந்தம் 6 ஆயிரம் ரூபாவுக்கு குறைவான வருமானம் பெறும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கே இது வழங்கப்படுகின்றது.

இம்முறை அதிக மாணவர்கள் புலமைப் பரிசில்களுக்காக தெரிவு செய்யப்பட்டமை ஆசிரியர்களின் கற்பித்தல் திறமையை எடுத்துக் காட்டுகிறது என்று கல்லூரி அதிபர் ஜனாப் எம். எம். எம். இப்றுஹீம் கூறினார்.

(ல-281)

# இறக்காமத்துக்கு உ. அரச அதிபர்
## காரியாலயம் தேவை

இறக்காமம் கிராமத்தில் சுமார் 5 தொடக்கம் 6 ஆயிரம் மக்கள் வரை வாழ்கின்றனர். இங்கிருந்து சுமார் 20 மைல்களுக்கு அப்பால் சம்மாந்துறை கிராமம் இருக்கின்றது.

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள்ளேயே இறக்காமம் அடங்குகின்றது. இதனால் இறக்காம மக்கள் இக்காரியாலய அலுவல்களை செய்வதில் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இந்த அலுவல்களுக்காக சுமார் 15 ரூபாவுக்கு மேல் செலவு செய்து இரண்டு பஸ்கள் மூலமாக சம்மாந்துறைக்கு சென்று வர வேண்டியிருக்கிறது. இதனால் வீணாக நேரத்தையும், பணத்தையும் செலவிட வேண்டி ஏற்படுகின்றது.

நாளாந்த செலவுகளுக்கே போதாத வருமானத்துடன் சிரமப்படும் இக்கிராம மக்கள் ஒரு நட்சாட்சிப் பத்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு கூட இவ்வளவு சிரமப்பட வேண்டி இருக்கிறது. ஆதலால் இக் கிராமத்தில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் ஒன்று அவசியம் தேவைப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து இக்கிராம மக்களின் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். எம். இஸ்மாயில்,
இறக்காமம்.

ஆசிரியருக்குக் கடிதம்

# புனித ரமழான் சிந்தனைகள்

வணங்குங்கள்! வழங்குங்கள்! என்ற இஸ்லாத்தின் பயன்மிகு போதனைகளை நிரூபித்துக் காட்டு நிலைக்களனாக திகழ்ந்த காட்டும் நிலைக்களனாக திகழ்ந்த புனித ரமழான் எம்மை விட்டுப் ஒரு மாத காலமும் எம் இல்லங்களிலும் இதயங்களிலும் உறவாடிய இனிய நோன்பும் இன்றோடு எம்மை விட்டுப் பிரிந்து செல்கின்றது.

அகிலத்துக்கெல்லாம் அருளொளியாம் அல்குர்ஆன் என்னும் ஞானச்சுடர் ஏற்றப்பட்ட மாதம். ஆம்! மாமறையாம் அல்குர்ஆன் மலர்ந்த மாண்புறு மாதமாம் ரமழானில் முபாரக் எமக்களித்த மகத்தான பரிசில்கள் தான் எத்தனை?

செல்வந்தரின் மாட மாளிகையில் மட்டுமின்றி, ஏழைகளின் மண் குடிசையிலும் கூட புனித ரமழானின் ஒளி வீசியது. அருள் நிழல் தரும் இம்மாதம் நமது அகத்திலே இருந்த பாவக் கறை போக்கி, இன்று பிறந்த பாலனைப் போல் நம்மை பரிசுத்தவான்களாக ஆக்கி விட்டது.

அறிவுக் களஞ்சியமாம், அல்குர்ஆன் அருளப்பட்ட மாதம், மாமறையாம் திருக்குர்ஆன் மலர்ந்த மாண்புறு மாதமாம் புனித ரமழான் இனிய நினைவுகளை இன்ப நுகர்வுகளையும் தந்து விட்டு, இப்பொழுது எம்மை விட்டும் பிரியும் தருவாய் இருக்கிறது.

இம்மாதத்தினால் நாம் அடைந்த நற்பேறுகளை நினைக்கும் போது அதன் பிரிவு உண்மையிலேயே எமக்கு வேதனையைத்தான் தருகின்றது.

இரவு, பகல், காலை, மாலை ஆகிய முழு நேரமும் வல்ல அல்லாஹ்வை நினைந்துருகி, அவனுக்கஞ்சி, அவனை அடிபணிந்து நடக்க வழி வகுத்தது நோன்பென்றால், ரமழான் மாதம் என்றால் அது மிகையாகாது.

எனவே. அதன் பிரிவு எம்மை பெரிதும் வருத்துகிறது. "இல்லை" என்று வருபவர்களுக்கு 'இல்லை' என்று கூறாது இருப்பதை ஈந்து, அந்த இதயங்களை குளுமைப்படுத்திய இனிய காட்சிகளையும் இம்மாதத்தில் தான் நாம் பரவலாக காணக் கூடியதாக இருக்கிறது.

அவ்வாறே அல்குர்ஆனை ஓதும் அன்பர்களின் மதுர கீதமும் மாட்சிமைமிக்க ரமழான் தினங்களில் தான், எட்டுத் திக்கிலும் எதிரொலிக்கக் கேட்கின்றன.

அதன் பிரிவுக்காக அனுதாபப்படும் அதேவேளை, நோன்பினால் நாம் பெற்ற மாண்புமிகு பண்புகளைதொடர்ந்தும் கடைப்பிடிக்க உறுதி பூண வேண்டும். ரமழான் மாதம் செய்த நல்லமல்கள் ஏனைய மாதங்களிலும் எம்மை பின்தொடர வேண்டும்.

இதுவே, ரமழான் மாதத்துக்கு நாம் வழங்கும் அன்புக் காணிக்கையாகும் நோன்பினால் நாம் பெற்ற அறுவடையும் இதுவேயாகும்.

"இன்ஷா அல்லாஹ்" - எல்லாம் வல்ல அல்லாஹ், அடுத்த வருடமும் இந்த மாண்புமிக்க நோன்புகளை நோற்கும் பாக்கியத்தை எமக்கு தந்தருள்வானாக!

ஆமீன்! ஆமீன்!!! யாரப்பல் ஆலமீன்!!!

(11)

— ரஷீட் நூருல் அமீன்.

## வானொலி

காலை
5.30 நாதாஞ்சலி
5.35 தோத்திரமாலை
6.00 சைவநற்சிந்தனை
6.05 கிறிஸ்தவநற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப்பாடல்கள்
7.00 இங்கிலிஷ் போர் யூ
7.30 மாகாணச்செய்திகள்
7.35 குரல்வகை
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி
8.45 தாளவாத்தியக் கச்சேரி — வைரவப்பிள்ளை வேணிலான்
9.15 தமிழ்மூலம் சிங்களம்
9.30 நாட்டுப்பாடல்கள்
9.45 ராகஆலாபனையும் விளக்கமும்
10.00 "சங்கமம்" அறிவிப்பாளர் நிகழ்ச்சி
10.15 கதைப்பாட்டு
10.30 அறிவுச்சுழல்
11.00 சித்திரம் – மரத்துக்கும் உயிருண்டு– கே. செல்வராஜா
11.30 சிறுகதை – தெளிவு அசோதரா ராஜகோபால்
11.45 மாணிக்கஆரம்

மாலை
6.00 செய்திகள்
6.10 அறிவிப்புகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 ஞானக்கோவை
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்

இரவு
8.00 உலகச்செய்திகள்
8.10 நாடகமேடைப்பாடல்கள்
8.40 மெல்லிசைத்தேர்வு
8.45 கண்டதும் கேட்டதும் செய்திச்சுருள்
9.00 செய்திகள்
9.30 மெல்லிசைப்பாடல்
9.45 நாடகம் – "விடியாத இரவுகள்" விக்னு செல்வநாயகம்
10.15 பஜன்–பெங்களூர் ஏ.ஆர். ரமணியம்மாள்

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 பிஜன் ஸ்ட்ரீட்
6.00 "லமா சங்ரஹய"
6.25 பிளே ஹவுஸ்
6.55 செய்திகள் தமிழ்
7.15 டேட்லைன்
7.45 டாட்ஸ் ஆர்மி
8.15 செய்திகள் சிங்களம்
8.35 ஜவனிகா
"...ரங்கி"

கிரிக்கெட்

# உலகில் சிறந்த

# சகல துறை ஆட்டக்காரர்

## தெரிவுப் போட்டி செப்டம்பரில்

லண்டன், ஜூன் 29

உலகில் சிறந்த சகல துறை கிரிக்கெட் ஆட்டக்காரரைத் தெரிவு செய்யும் போட்டி ஒன்று எதிர் வரும் செப்டம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெற உள்ளது.

இப்போட்டியில் இங்கிலாந்தின் இயன் பொத்தம், இந்தியாவின் கபில் தேவ், நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹெட்லீ, மேற்கிந்தியாவின் மெல்கம் மார்ஸப் மார்சல், தென்னாபிரிக்காவின் கிளய்வ்ரைஸ் ஆகியோர் பங்கு பற்றுகின்றனர்.

இப்போட்டியில் வெற்றி பெறுபவருக்கு 8100 டாலர்கள் பரிசாகக் கிடைக்கும்.

இரண்டாவதாகத் தெரிவு செய்யப்படுபவருக்கு 6750 டாலர்களும், மூன்றாவதாக வருபவருக்கு 5400 டாலர்களும், நான்காவதாகவும், ஐந்தாவதாகவும் வருபவர்களுக்கு முறையே 4500, 2700 டாலர்களும் பரிசாகக் கிடைக்கும்.

இங்கிலாந்தின் டெஸ்ட், மற்றும் பிராந்திய கிரிக்கெட் சபை இப்போட்டிக்கான மத்தியஸ்தர்களை ஏற்பாடு செய்யவும், விதிகளை அமுல் செய்யவும் இசைந்துள்ளது.

போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் 16 ஓவர்களுக்கு துடுப்பெடுத்தாட வேண்டும். போட்டியிடும் ஏனைய நால்வரினதும் தலா 4 பந்து ஓவர்களை துடுப்பெடுத்தாடுபவர் எதிர்த்தாடுவார். அவர் எத்தனை முறை வெளியேற்றப்படுகிறாரோ அந்த எண்ணிக்கையால் அவரது மொத்த ஓட்ட எண்ணிக்கை வகுக்கப்படும்.

அதனால் பெறப்படும் சராசரி பந்து வீச்சின் போது கைப்பற்றப்படும் விக்கட்டுகளினால் பெருக்கப்படும்.

பந்து தடுப்புக்கு சமர்செட், கிளொஸ்டர்சயர் ஆகிய பிராந்திய அணிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 18 முதல் தர வீரர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.

முன்னணி விக்கட் காப்பாளர்களான போல் டவுன்டன், பொப் டேலர் ஆகியோர் விக்கட் காப்புக்கு பொறுப்பாக இருப்பார்கள்.

இந்த நிகழ்ச்சி பிரிட்டனில் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்படும்.

இப்போட்டியை 1985, 1986 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த முறை இங்கிலாந்துக்கு வெளியில் இப்போட்டி இடம்பெற வாய்ப்புண்டு. (ந)

## விளையாட்டுப் பகுதி

## உதைபந்தாட்ட அணிக்கு புதிய மருத்துவர்

கொழும்பு, ஜூன் 30

இலங்கை உதைபந்தாட்ட கட்டுப்பாட்டுச் சபை டாக்டர் சிவா. ஞான பண்டிதனை தேசிய உதைபந்தாட்ட அணியின் மருத்துவராக நியமித்துள்ளது.

தேசிய உதைபந்தாட்ட அணிக்கு சொந்த மருத்துவர் ஒருவர் நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

டாக்டர் ஞான பண்டிதன் இலங்கை மருத்துவ உதவிகள் ஒன்றிணையத்தின் ஸ்தாபக உறுப்பினராவார். (ந)

## தியத்தலாவையில் நவீன விளையாட்டரங்கு

அப்புத்தளை, ஜூன் 29

அப்புத்தளை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த தியத்தலாவையில் நவீன விளையாட்டரங்கு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது தியத்தலாவையில் பொது விளையாட்டு மைதானம் ... தற்கு அமைச்சர் முன் வந்துள்ளார்.

இவ்விளையாட்டரங்கு அமைக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டதும், இப்பகுதியிலுள்ள விளையாட்டுப் பிரியர்களும், பாடசாலை மாணவர்களும் பெரும் நன்மை அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந—100)



## வெள்ளித் திரைகளில்

6—வது வாரம்!

சமந்தா
10, 2, 6, 9–30

வின்ஸர்
(யாழ். நகர்) 10.30, 2.30, 6, 9.30

நிந்தாவூர் சினிமா
(நிந்தவூர்) 6–30, 9–30.

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த

ஒளி விளக்கு
(கலர்)

(புத்தம் புதிய கொப்பி)

இளைஞரிடையே

8.15 செய்திகள் சிங்களம்
8.35 ...
9.05 "சராங்கி"
9.30 செய்திகள் ஆங்கிலம்
9.50 பொம்பா
10.30 உலகச் செய்திகள்
10.35 பொம்பா தொடர்ச்சி

### ஐ. டி. என்.

6.01 சீசேம் ஸ்ட்ரீட்
7.00 அனிமல்ஸ் இன் ஆக்ஸன்
7.30 பிலம்பார்ட்ஸ்
8.30 சில்வா
9.00 ...ரான்ஸ் பீவர்
9.30 செய்திகள் ஆங்கிலம்
9.45 டார்கட்

...னது.

தற்போது தியத்தலாவையில் பொது விளையாட்டு மைதானம் ஒன்று இல்லை. தியத்தலாவையில் இருக்கும் விளையாட்டரங்குகள் யாவும் இராணுவத்திற்கு சொந்தமானவையாகும்.

பொது மைதானம் இல்லாத குறை, சுதேச வைத்தியதுறை அமைச்சரும், அப்புத்தளைத் தொகுதி எம். பியுமான திரு. டப்ளியூ. ஜே. எம். லொக்கு பண்டாரவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்தே இப்புதிய விளையாடரங்கை அமைத்து கொடுப்ப...



இராணுவ அணிக்கும் சி.எச். அன்ட் எப். சி. அணிக்குமிடையே காலி முகத்தில் நடைபெற்ற றகர் போட்டியில் இடம் பெற்ற சுவாரஸ்யமான கட்டமொன்றைப் படத்தில் காண்க. (ந*ச)

# பாடசாலைகளின் கிரிக்கெட் போட்டிகள்

கொழும்பு, ஜூன் 30

சென் பீட்டர்ஸ் அணியின் 17 வயதுக்குட் பட்ட கிரிக்கெட் அணிக்கும், சென் செபஸ்டியன் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்குமிடையே மொறட்டுவையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென் பீட்டர்ஸ் அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் இந்திரஜித் மெண்டிஸ் சென் செபஸ்டியன் கல்லூரிக்காக பெற்ற 53 ஓட்டங்களும், ஆர். கவுஸ் சென் பீட்டர்ஸ் அணிக்காக 56 ஓட்டங்களுக்காக 6 விக்கட்டுகளைச் கைப்பற்றியதும் குறிப்பிடத்தக்கது.

சென் பீட்டர்ஸ் அணி முதல் இன்னிங்ஸில் 126 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய சென் செபஸ்டியன் அணி 124 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது. (ந)

★

கொழும்பு, ஜூன் 30

றோயல் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்கும், தர்மபால கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி மழையின் காரணமாக வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவுற்றது.

றோயல் கல்லூரி பெற்ற 59 ஓட்டங்களுக்கு பதிலாக தர்மபால கல்லூரி அணி 6 விக்கட் நட்டத்துக்கு 28 ஓட்டங்களை ஆட்ட முடிவின் போது பெற்றிருந்தது. (ந)

## தேசிய இளைஞர் சேவைகள் கழக விளை. போட்டிகள்

அட்டன், ஜூன் 29

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கும் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டி நிகழ்ச்சி எதிர் வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி கொட்டகலை கிராமசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

நுவரெலியா பிராந்தியத்தில் உள்ள 20 க்கும் மேற்பட்ட இளைஞர் கழகங்கள் மேற்படி விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்கின்றன.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நுவரெலியா பிராந்திய அதிகாரி திரு. ஏ. லோரன்ஸ் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்ச்சியில் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், இ. தொ. கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (...)

## தேசிய விளையாட்டு விழா ஏற்பாடுகள்

குருநாகல், ஜூன். 29

விளையாட்டுத் துறை அமைச்சினால் இந்த வருடம் குருநாகலில் நடைபெறும் 11 வது தேசிய விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை குருநாகல் மாவட்ட அமைச்சர் திரு. காமினி ஜெயவிக்கிரம பெரேரா எடுத்து வருகிறார்.

விளையாட்டு விழாவுக்கான பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறு குருநாகல் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை மாவட்ட அமைச்சர் பணித்துள்ளார். (ந-138)

ஒலிம்பிக் போட்டி:

# மேற்கு ஜெர்மன் அணியில் 414 போட்டியாளர்கள்

பிராங்பர்ட், மே. ஜெர்மனி, ஜூன் 29

ஜூலை மாதம் 28 ஆம் திகதி லொஸ் ஏஞ்ஜலில் ஆரம்பமாகும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள மேற்கு ஜெர்மனி 414 போட்டியாளர்களை அனுப்பும்.

மேற்கு ஜெர்மனி வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ள அணிகளில் இந்த அணிகளிலேயே களில் இந்த தடவையே அதிக வீரர்கள் இடம்பெறுகின்றனர்.

முன்னர் 1976 இல் மொன்ட்ரீயலில் நடைபெற்ற போட்டிக்கு மேற்கு ஜெர்மனி 290 வீரர்களை அனுப்பியிருந்தது.

இந்த போட்டியாளர்களுடன் மேற்கு ஜெர்மனி அணியில் பயிற்சியாளர்களும், அதிகாரிகளுமாக மேலும் 200 பேர் உடன் செல்கின்றனர்.

இவர்களையும் சேர்த்து அணியில் மொத்தமாக 614 பேர் இடம் பெறுவர். (ந)

## இராகலை வித்தியாலய அணி வெற்றி

இராகலை, ஜூன் 29

இராகலை, டியனில்ல தொழில் பயிற்சி நிலையத்தில் திரு. ரஞ்சித் குணசேகர தலைமையில் நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இராகலை தமிழ் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

டியனில்ல தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இச் சுற்றுப் போட்டியில் உடபுசல்லாவ, எம்மஸ்ட், டியனில்ல, நியூ ஸ்டார், டி.டி.ஐ. உட்பட ஏழு கரபந்தாட்ட குழுக்கள் கலந்து கொண்டன. பரிசில்களை கல்லூரி அதிபர் திரு. ரஞ்சித் வழங்கினார். (ந-265)

## மைதானம் புனரமைப்பு

கிண்ணியா, ஜூன் 29

கிண்ணியா, "டிஸ்கோ" விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு மைதானத்தில் சிரமதான பணிகள் மூலம் புனரமைப்பு வேலைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

இச் சிரமதான வைபவத்திற்கு கிண்ணியா "டிஸ்கோ" விளையாட்டு கழகத்தின் தலைவர் ஜனாப் எம். எப். எம். சலீம் தலைமை வகித்தார். (ந-151)

# பாடசாலை றகர்

கொழும்பு, ஜூன் 30

தர்மராஜா கல்லூரி அணிக்கும், நாலந்தாக் கல்லூரி அணிக்குமிடையே ஹவலக் மைதானத்தில் நடைபெற்ற றகர் போட்டியில் தர்மராஜா அணி 10-3 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 7-3 புள்ளிகளால் தர்மராஜா அணி முன்னணியில் நின்றது.

அஜித் தர்மரட்ண, ஆர். கே. விஜயவர்தன, றொஹான் மல்லவாராச்சி ஆகியோர் தர்மராஜா அணிக்கும்.

அஜித் சில்வா நாலந்தா அணிக்கும் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

குயின்டின் இஸ்ரேல் இப் போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளுக்கிடையிலான போட்டியில் நாலந்தா அணி 12-6 புள்ளிகளால் வெற்றி பெற்றது. (ந)

# ...விழிப்பேற்பட மன்றங்களின்பணிஅவசியம்

## பொதுக் கூட்டத்தில் உரை

சாவகச்சேரி, ஜூன் 29

இளைஞர் மத்தியில் மத நம்பிக்கையை - இறைபக்தியை ஆத்மீக ஈடேற்றத்தை ஏற்படுத்த சமய மன்றங்கள் பணி செய்ய வேண்டும் இதனால் அவர்களிடம் விழிப்பு ஏற்படும்.

திரு. மு. பரராஜசேகரம் இவ்வாறு கூறினார்.

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் சரசாலை நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"இளைஞர்கள் மத்தியில் இன்று இறை நம்பிக்கை அருகி வருகிறது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இவர்கள் மத்தியில் மத நம்பிக்கையையும், கடவுள் பக்தியையும் ஏற்படுத்த வேண்டும். இதற்கு இத்தகைய சமய மன்றங்களின் பணி மிகவும் அவசியம்" என்று அவர் கூறினார். (ல-51)

# சுவரொட்டி சித்திரப் போட்டி

கொழும்பு, ஜூன் 30

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் எதிர்வரும் சர்வதேச இளைஞர் ஆண்டையொட்டி சுவரொட்டி சித்திரப் போட்டி ஒன்றை நடத்துவதென்று முடிவு செய்திருக்கிறது.

இப் போட்டியில் 17 வயதிற்கும், 29 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் ஆகிய இருபாலாரும் பங்குபற்றலாம்.

இப் போட்டியின்போது முதலாவது இடத்தைப் பெறும் சுவரொட்டி, சர்வதேச இளைஞர் ஆண்டின் நினைவுச் சுவரொட்டியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

முதல் மூன்று சிறந்த சுவரொட்டிகளுக்கு முறையே 3,500 ரூபா, 1,000 ரூபா, 500 ரூபா பரிசு வழங்கப்படும். சிறந்த 10 சுவரொட்டிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டியில் பங்கு பெற விரும்புவோர் அதற்கான விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர், பிராந்திய காரியாலயங்களூடாக எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். (ண- ர)

## நிதி ஒதுக்கீடு

கொழும்பு. ஜூன் 30

கல்முனை கல்வி வட்டாரப் பாடசாலைகள் மூன்றின் நூலக செலவுகளுக்காக சுமார் 30,000 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை ஆகிய பகுதிகளில் உள்ள மூன்று பாடசாலைகளுக்கே தலா பத்தாயிரம் ரூபா வீதம் நிதி வழங்கப்படும். (ண- ர)

## 'லைலத்துல் - கத்ர்' அனுஷ்டிப்பு

கொழும்பு, ஜூன் 30

புனித "லைலத்துல் - கத்ர்" இரவை முஸ்லிம்கள் கடந்த புதனன்று இரவு அனுஷ்டித்தனர்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் உட்பட நாட்டின் சகல பள்ளிவாசல்களிலும் லைலத்துல் கத்ர் இரவையொட்டி விசேட மதவழிபாடு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மஸ்ஜிதுகளில் தரித்திருந்த முஸ்லிம்கள் சமய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர். வானொலியில் விசேட ஒலிபரப்பும் இடம் பெற்றது. (ண- 7)

# ஒபரோய் ஹோட்டல் குண்டுவெடிப்பு

## பெண் ஊழியர் ஒருவர் உடல் சிதறி மரணமானார்

### முதல்நாள் தங்கி இருந்த தம்பதியர் யார்?

கொழும்பு, ஜூன் 30

கொழும்பிலுள்ள லங்கா ஒபரோய் ஹோட்டலில் வியாழன் பிற்பகல் 1 - 05 மணிக்கு ஏற்பட்ட குண்டு வெடிப்பின் போது, ஒரு பெண் ஊழியர் கொல்லப் பட்டார்.

ஹோட்டலின் எட்டாவது மாடியில் உள்ள 810 ஆவது இலக்க அறையிலேயே குண்டு வெடித்தது. அதனால் மூன்று அறைகள் சேதம் அடைந்தன. ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நாலா பக்கமும் சிதறின.

குண்டு வெடித்த போது 810 ஆவது இலக்க அறைக்குள் எவ ரும் இருக்கவில்லை. முதல் நாள் இரவு நீர்கொழும்பைச் சேர்ந்த ஜோன் செபஸ்தியன் என்ற தமிழ்த் தம்பதியர் அங்கு தங்கி யிருந்தனர். அவர்கள் வியாழன் காலை 9.30 மணிக்கு அங்கி ருந்து சென்று விட்டனர்.

ஹோட்டல் மேற்பார்வை யாளரான திருமதி வாலெஸ் வழமை போல் மேற்பார்வை நடத்தும் பொருட்டு 810 ஆவது இலக்க அறைக்குள் சென்ற போதே குண்டு வெடித்தது. அந்தக் குண்டின் அபார சக்தி யால் தூக்கி எறியப்பட்ட திரு மதி வாலெஸ்சின் உடல் அடுத்த அறைக்குள் போய் விழுந்து கிடந்தது.

அவரின் உடல் மிகவும் சிதைந்த நிலையில் காணப்பட் டது.

குண்டுகளைச் செயல் இழக்கச் செய்யும் பொலீஸ், இராணுவ நிபுணர்கள் சம்பவம் நடை பெற்ற இடத்துக்கு விரைந்த னர்.

பொலீஸ் கமிஷனர் திரு. நீல் வீரசிங்க தலைமையில் விசார ணைகள் நடைபெற்று வருகின் றன.

பிரதமரின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா, உள் நாட்டுப் பாதுகாப்பு அமைச் சர் திரு. ரி. பி. வேரப்பிட்டிய, ராஜாங்க அமைச்சின் செயலா ளர் திரு. டக்ளஸ் லியனகே ஆகியோரும் சம்பவம் நடை பெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

இச் சம்பவத்தின் போது 810 ஆவது இலக்க அறைக்குக் கீழ் உள்ள அறையில் (7 ஆவது மாடியில்) தங்கியிருந்த பிலிப் பைன்ஸ் வாசியான திருமதி பென்ஜமின் பஹாடியொன் தெய்வாதீனமாகத் தப்பினர். குண்டு வெடித்த சமயத்தில் உணவுக்காக அவர் கீழ்த் தளத் துக்குச் சென்றிருந்தார்.

"என் உயிரைக் காத்ததற் காக கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும். நான் மதிய உணவுக்குச் சென்றி ருந்த சமயம், மேலே பெருத்த வெடிச் சத்தம் கேட்டது. அங் கிருந்து புகையும் கிளம்பியது. அவ்வமயம் எங்கும் பதற்றம் நிலவியது. பின்னர் நான் மேலே சென்று, எனது அறையைப் பார்த்தேன். மேல் தளப் பகுதி உடைந்து எனது கட்டிலின் மேல் விழுந்து கிடந்தது" என்று திருமதி பஹாடியொன் கூறினர்.

(ண— க)





கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் வியாழன் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மரணமான திருமதி ரொஸெல் வொலஸை இடது பக்க படத்திலும் அவரின் இரு பிள்ளைகளான ஷிஹான் வொலஸ் சுயேஸ் வொலஸ் ஆகியோரை வலது பக்க படத்திலும் காண்கிறீர்கள். (ண—7 *)

# காணாமல் போன கப்பல் துறைமுகம் வந்து சேர்ந்தது



கப்பலின் கடெட் அதிகாரி ஏ. கே. ஜீ. மிஸ்ரா கப்பலின் "புரப்பலரில் சிக்கிய வலை களுடன் நிற்பதை இப் படத்தில் காண்கிறீர்கள். (ண— 7*)

கொழும்பு, ஜூன் 30

கடலில் மர்மமான முறையில் காணமற் போன தாகக் கருதப்பட்ட "நந்த் மைனு" என்ற மோட் டார் கப்பல் வியாழனன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இக் கப்பலில் 340 தொன் பம்பாய் வெங்கா யம் ஏற்றி வரப்பட்டது. கப்பல் ஜூன் 19 ஆம் திகதி கொழும்பு வந்து சேரவிருந்தது.

கொழும்பிலிருந்து 70 மைல் தூரத்துக்கு அப் பால் கப்பல் சிக்கலுக்குள்ளானதாகக் கப்பலின் கப்டன் திரு. எஸ். காசிநாதன் "தினபதி"க்குத் தெரிவித்தார்.

சில மீன்வலைகள் கப்பலின் "புரப்பலரில்" சிக் குண்டன. இதனாலேயே கப்பல் மேற்கொண்டு பய ணத்தைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது என் றும் அவர் கூறினர்.

மீன்வலை சிக்கியதால் இரு என்ஜின்களில் ஒன்று உடைந்தது. கப்பல் தத்தளிக்கத் தொடங்கி யது.

உதவி கோரி அபயக்குரல் எழுப்பப்பட்டது. ஆனல் கொழும்பிலிருந்து ஒரு பதிலும் வரவில்லை.

என்ஜினைப் பழுது பார்த்து முடிப்பதற்கு கப் பல் சிப்பந்திகளுக்கு நான்கு நாட்கள் பிடித்தன. ஜூன் 23 ஆம் திகதி மீண்டும் பயணம் தொடர்ந் தது.

இவ்வாறு திரு. காசிநாதன் தெரிவித்தார்.

இக் கப்பலில் ஏற்றி வரப்பட்ட பம்பாய் வெங்காயம் கப்பலிலேயே இருக்கிறது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் கப் பலில் இருந்து வெங்காயத்தை இறக்குவது பற்றி தீர்மானிக்கும்.

(ண— 7)

### சமூக விவரம்

கொழும்பு, ஜூன் 30

1984 ஆம் ஆண்டுக்கான சமூக — பொருளாதார விவரங்களை இலங்கை மத் திய வங்கியின் புள்ளி விவ ரப் பிரிவு வெளியிட்டுள் ளது.

இலங்கைப் படம் மற்றும் 30 விவரப் பட்டியல்கள் ஆகி யன அடங்கிய ஒரு கோவை யாக அது வெளியிடப்பட்டிருக் கிறது.

இலங்கையின் சமூக நிலைமை, வெளிநாட்டு வர்த்தகம், பொரு ளாதார அபிவிருத்தி, விலைகள், வங்கி நடைமுறைகள் ஆகியன அவற்றுள் அடங்கியுள்ளன.

### நியமனம்

புத்தளம், ஜூன் 29

புத்தளம் தொகுதி தமிழ், முஸ்லிம் பாடசாலைகளு க்கு பத்து கலை பட்டதாரி ஆசிரிர்கள் புதிதாக நிய மனம் பெற்றிருக்கிறார்கள்.

புத்தளம் சாகிரா மத்திய கல்லூரிக்கு மூன்று பேரும்

போதைவஸ்து கடத்தல்:

## இலங்கையர் 10 பேருக்கு போலந்தில் சிறைத்தண்டனை

வார்ஸோ, ஜூன் 29

போதைப் பொருள் கட த்தல் குற்றச்சாட்டின் பேரில் 10 இலங்கையர்க ளுக்கு போலந்தில் சிறைத் தண்டனை விதிக்கப்பட் டது.

கம்யூனிஸ்ட் கட்சித் தினசரி யான ரிபுனு லுடு இச் செய்தியை வெளியிட்டது.

ஆசியாவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான போதைப் பொருள் கடத்தலை போலந்து ஊடாக நடத்தினர் கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டார் கள். பெருந் தொகையான ஹிரோயின் போதைப் பொரு ளும் கைப்பற்றப்பட்டது.

இவர்களுக்கு வார்ஸோ நீதி மன்றம் ஒன்று ஒரு வரு டம் முதல் இரண்டு வருட காலம் வரையிலான சிறைத் தண்டனையை விதித்தது.

இதேவேளையில் போலந்து

### நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான



மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1984 ஜூன் 28 இல்

| | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. 2516.25 | ரூ. 2517.75 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்று விகிதம் — 1984 ஜூன் 28 இல்

| | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. 2515.35 | ரூ. 2518.35 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. 3381.23 | ரூ. 3391.06 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. 897.74 | ரூ. 902.60 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. 290.98 | ரூ. 295.16 |
| 100 ஜப்பானிய யென் | ரூ. 10.5542 | ரூ. 10.6155 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்திமூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப்பிடிக்க மத்திய வங்கி வழங்கும் விகிதம்

| | ஆகக் குறைந்த வாங்கும்விகிதம் | ஆகக் கூடிய விற்கும் விகிதம் |
|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. 99.68 | ரூ. 100.08 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. 307.69 | ரூ. 308.91 |
| 100 ஈரான் ரியால் | ரூ. 28.36 | ரூ. 28.48 |
| 100 இந்திய ரூபா | ரூ. 227.19 | ரூ. 228.15 |
| 100 நேபாள ரூபா | ரூ. 156.03 | ரூ. 156.65 |
| 100 பாகிஸ்தான் ரூபாய் | ரூ. 181.91 | ரூ. 182.67 |

தண்டனையை விதித்தது.

இதேவேளையில் போலந்து இலங்கையர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் சுமார் 2 கோடி 20 லட்சம் டாலர் பெறுமதியான 11 கிலோ கிராம் ஹிரோயின் போதைப் பொருளை கடந்த மாதம் டெலிவிஷனில் காட்டியது.

சுங்க அதிகாரிகளும், பொலீஸாருமே இந்தப் போதைப் பொருளைக் கைப்பற்றியிருந்தார்கள்.

கடத்தல்காரர்கள் இந்த போதைப் பொருளை போலந்தில் விற்பனை செய்வதற்கு உத்தேசித்திருக்கவில்லை. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு கொண்டு செல்லும் மார்க்கமாகவே அவர்கள் போலந்தைப் பயன் படுத்தியிருக்கிறார்கள் என்று தினசரி மேலும் தெரிவித்திருக்கிறது. (ண)

மனம் பெற்றிருக்கிறார்கள்.

புத்தளம் சாகிரா மத்திய கல்லூரிக்கு மூன்று பேரும் பாத்திமா மத்திய கல்லூரிக்கு மூன்று பேரும் கல்பிட்டி அல் அக்ஸா வித்தியாலயத்திற்கு இரண்டு பேரும், உடப்பு மகா வித்தியாலயத்திற்கு ஒருவரும், புளிச்சாக்குளம் உமர் பாறூக் மகா வித்தியாலயத்திற்கு ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம். எச். எம். நைனா மரிக்காரின் வேண்டுகோளுக்கிணங்க கல்விச் சேவைக்குழு இவர்களை நியமித்திருக்கிறது.

(ல-241)

# மத்திய கிழக்கு செல்லும் மகளிருக்கு தொழிற்பயிற்சி

கொழும்பு, ஜூன் 30

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்களின் நலன் கருதி அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

கிராமிய அபிவிருத்தி அமைச்சும், தொழில் திணைக்களமும் ஒன்றிணைந்து இந்தப் பயிற்சி வகுப்புகளை நடத்தும்.

இப் பயிற்சி வகுப்புகள் எதிர் வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் கொழும்பிலும், அதையடுத்து ஏனைய பிரதேசங்களிலும் நடத்தப்படும்.

இலங்கைப் பெண்கள் வெளி நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் போது எதிர்நோக்கும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகவே இப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட இருக்கின்றன.

குழந்தை பராமரிப்பு, குடும்ப நலன், மின் உபகரணங்களைப் பாவித்தல், மொழிப் பயிற்சி, பண்பாடு, பழக்க வழக்கம் என்பவற்றில் பயிற்சி அளிக்கப் படும்.

சுமார் ஆறு மாத காலப் பயிற்சியின் பின், இவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப் படும். (ண- ர)


## றப்பர் பீடிங்

எல்லா மோட்டார் வாகனங்களுக்கும்

## சரத் இண்டஸ்ரீஸ்

★ றப்பர் புஷ் ★ றப்பர் பீடிங்ஸ்

★ றப்பர் பக்கிங் - சிக்னல் லேட்டுக்கு

* மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்

(மொத்த ஆடர்களுக்கு தொடர்பு கொள்ளவும்),

சரத் இண்டஸ்ரீஸ்

SARATH INDUSTRIES

இல. 12, மகா புத்தகமுவ, அங்கொடை.

பதிவு இல. 80655


## ஆயுள்வேத பதில் ஆணையாளர்

கொழும்பு, ஜூன் 30

ஆயுள்வேத திணைக்களத்தின் பதில் ஆணையாளராக திரு. எல். சுகுணதாச நியமிக்கப்பட்டார்.

இதுவரை ஆயுள்வேத ஆணையாளராக கடமையாற்றிய திரு. சி. பீ. வன்னிநாயக்கா அரசினால் சுவீகரிக்கப்பட்ட பி. சி. சி. நிறுவனத்தில் தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## புதுடில்லியில் அத்துலத்முதலி

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி வியாழக்கிழமை புதுடில்லி போய்ச் சேர்ந்தார்.

அவரை இந்திய வெளி விவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ், புதுடில்லி இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்ன ஆகியோர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

ராஜாங்க அமைச்சு இது பற்றி அறிவித்தது.

(ண- 7)

## பண்டாரவளை பாடசாலை மூடப்பட்டது

பண்டாரவளை, ஜூன் 29

பண்டாரவளை கல்விப் பிராந்தியத்தைச் சேர்ந்த பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயம் திங்கட்கிழமைவரை மூடப்பட்டிருக்கிறது.

திங்கள் காலை பிரஸ்தாப வித்தியாலய மாணவர்கள் ஆட்சேப ஊர்வலம் செல்ல முற்பட்ட சம்பவத்தையடுத்தே பாடசாலை மூடப்பட்டது.

இத்தகவலை வித்தியாலய அதிபர் திரு. எம். பி. அல்விஸ் தெரிவித்தார்.




பம்பாய் வெங்காயத்தை ஏற்றிக் கொண்டு வருகையில் மர்மமான முறையில் மறைந்ததாகக் கருதப்பட்ட "நந்த் மைனு" என்ற மோட்டார் கப்பல்கொழும்புத் துறைமுகத்தின் எலிஸபெத் இறங்கு துறையில் தரித்திருப்பதைப் படத்தில் காணலாம். (ண- 7*)

## மின்சார வசதி

அக்குரஸ்ஸ, ஜூன் 29

அக்குரஸ்ஸ தேர்தல் தொகுதியில் 60 லட்சம் ரூபா செலவில் ஏழு கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

அக்குரஸ்ஸ எம். பி- திரு- தயானந்த விக்கிரமசிங்காவின் சிபார்சுக்கிணங்கவே இந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மிகவும் பின்தங்கிய கிராமங்களான மலிதுவ, கெடன்வில, பங்கம, தியலபே, ஹிக்கொட, கொரகஹ, எரமுதுகொட ஆகிய கிராமங்களுக்கே மின்சார வசதி செய்து கொடுக்கப் படவிருக்கின்றன.

(ஜ--25)


நீண்ட பாவனைக்கு சிறந்தது

Zenith ஜெனித்

றப்பர் சிலிப்பர்கள்



எங்களின் விற்பனை வேன்மூலம் வியாபாரிகளுக்கு கவர்ச்சியான கழிவு கொடுக்கப்படும்.

| | | பெரியசைஸ் | நடுத்தரசைஸ் | சிறியசைஸ் |
|---|---|---|---|---|
| சூப்பர் | — | 15.90 | 13.90 | 11.90 |
| டீலக்ஸ் | — | 17.90 | 15.90 | 13.90 |
| ரோயல் | — | 24-90 | 22-90 | 19-90 |

RAVI AD

ஜெனித் டிரேட்ஸ் லிமிடெட்

245 1-B காலிவீதி கொழும்பு-4.

தினபதி ஈகைத் திருநாள் சிறப்பிதழ்

# நாங்கள் புனிதர்கள் ஆவதற்கு அல்லாஹ் அளித்த நல்வாய்ப்பு

## தத்துவப் பொன்னுள்!

– கவிஞர் கவிவாணன் –

தத்துவத்தைச் சொரிகின்ற ஷவ்வால் நாளே
தரணியிலே ஈகையினைச் சாற்றும் நாளே;
புத்தாடை புது உணர்வு, பூரிப்போடு
புளகாங்கிதம் கொண்ட தீனேர் தம்மின்;
சித்தத்தில் மகிழ்ச்சியினை அள்ளிப் பாய்ச்சும்;
செம்மை மிகும் பொன்னுளே சமுதாயத்தில்
புத்திபல புகன்றே நன்நெறிகள் காட்ட
புறப்பட்ட புது நாளே வாராய்! வாராய்!!

"தௌருத்து" வேதமது வந்த நம்ழான்!
"சபூர்" வேதம் இறங்கி வந்த தூய நம்ழான்!
இப்ருகீம் நபிக்கு ஷுஹுப் ஈந்த நம்ழான்!
"இன்ஜீல்" வேதத்தின் வரவும் இணைந்த நம்ழான்!!
"பத்ர்"றினிலே வரலாறு கண்ட நம்ழான்;
வாழ் வொளிர நெறியொளிர வையம் வாழ;
"தௌஹீதின்" தரம் விளங்கக் குர்ஆன் தந்த
தயாபரனும் அல்லாஹ்வின் அருளே நம்ழான்!

மாண் பொளிரும் நோன்புதனை நோற்று நின்று
மாமறையின் அருள்குடித்துத் தத்து வங்கள்
தான்படித்துக் கடன்முடித்த மகிழ்ச்சி தன்னை;
தருகின்ற ஷவ்வாலின் புனித நாளே!
வான் சிறக்கும் தக்பீரின் ஓதை ஓங்க,
வாய்களெலாம் தவ்பாவின் வேண்டல் வீங்க,
வீண் ஒழிந்து வையத்தில் வெற்றி தேங்க
வந்திடுக ஷவ்வாலின் புதிய நாளே!!

நல்லுணர்வு; நல்லூக்கம்; நல்ல நோக்கம்
நல்லறிவு; நல்லெண்ணம்; நலம் மிகுந்த
நல்லிதயம்; நல்லாற்றல் நல்ல கொள்கை!!
நல்லவழி நல்லொளி நல்ல வாழ்வு
நல்லோர்மை நல்லாட்சி நல்லமாட்சி,
நல்லியக்கம் நல்லெழுச்சி, நல்ல பெற்றி
நல்லுழைப்பு நல்லுயர்வு நன்றே ஓங்க,
நல்லுதயம் பெற்றிங்கு வாபொன்னுளே!!

## அதை ஒருபோதும் வீணடிக்கக் கூடாது

ஒரு மாத காலம் ஒப்புடன் நோன்பிருந்த களிபேருவகை ஈகைத் திருநாளில் களைகட்டுகிறது. கடமையை இனிதே நிறைவேற்றிய கடமை வீரர்களுக்கு நாளை வீரத் திருநாள், வெற்றிப் பூரிப்பின் பெருநாள், உத்தம அடியார்களுக்கு நாளை உவகைப் பெருநாள்.

இத்திருநாளில் அல்லாஹுத்தஆலா தன் வானவர்களை நோக்கி:—

எனது வானவர்களே! பணியாளன் தனது பணியைப் பூரணமாகச் செய்து முடித்துவிட்டால் அவனுக்கு நான் என்ன கூலி தர வேண்டும்? எனக் கேட்கிறுன்.

அதற்கு வானவர்கள்:

எங்கள் இரட்சகா? அந்தப் பணியாளனுக்குப் பூரண கூலியையும் தந்தருள்வாயாக என்று பதில் பகர்கிறார்கள்.

இந்த விடையைக் கேட்டு அல்லாஹ்:—

எனது வானவர்களே! நீங்கள் யாவரும் சாட்சிகளாக இருங்கள். அவர்கள் நோற்ற ரமழான் மாத நோன்புகளுக்காகவும், தொழுத தருவீஹ் தொழுகைக்காகவும், அவர்கள் கொடுத்த ஸக்காத்துக்காகவும், அவர்கள் ஓதிய திருக்குர்ஆனுக்காகவும் அவர்களை நான் பொருந்திக் கொண்டதே அவர்களுக்கான நற்கூலியாகும்.

அவர்களின் எல்லா பாவங்களையும் நாம் மன்னித்து அருளினேன்.

என்னுடைய அடியார்களே, என்னிடமே எதையும் கேளுங்கள், எனது கண்ணியம், மேன்மை கருணை, உயர்வு மேலான அந்தஸ்துகள் மீது ஆணையாக இந்தப் பொதுக்கூட்டத்தில் இம்மை மறுமைக்கான சர்வ நலன்களையும் உங்களுக்கு அளிக்கிறேன்.

என் வல்லமை மீது ஆணையாக நான் உங்களை இழிவு படுத்த மாட்டேன். இன்று நீங்கள் என் அருளைப் பெற்றுத் திரும்புங்கள் நீங்கள் அனைவரும் மன்னிக்கப்பட்டு விட்டீர்கள்.

நீங்கள் என்னைத் திருப்திப் படுத்தினீர்கள். நான் உங்களை குறித்து திருப்தி கொள்கிறேன்.

இவ்வாறு இறைவன் கூறுவான்.

ஒரு மாத காலமாக நாம் பரிசுத்தவான்களாக மாற நோன்பு மாதத்தில் எமக்கு மிக அரிய வாய்ப்பு கிட்டியது. "லைலத்துல் கத்ர்" என்னும் ஏற்றமிகக – அருள்மறை இறங்கிய அற்புத இரவைச் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது. பத்ரு அஹ்லாக்களை நினைவு கூர சந்தர்ப்பம் கிடைத்தது. பாவ




## சமுதாய நலனுக்கு ஒற்றுமை அவசியம்

இன்று முஸ்லிம்களுக்குத் தேவைப்படுவது ஐக்கியமும், ஒற்றுமையுமே. இவை நிலை



மாக்கார் தமது பெருநாள் செய்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

சமுதாய ஒற்றுமை நிலை பெறவும், நாடு சுபிட்சமுறவும் முஸ்லிம்கள் பாடுபட வேண்டும். நாட்டுப்பற்றுடன் முஸ்லிம்கள் தொடர்ந்தும் வாழ வேண்டும்.

நாடு இக்கட்டான ஒரு நிலை

## பாவங்களை போக்கி தூய்மை பெறுவோம்



நான் பொருத்திக் கொண்டதே

# முஸ்லிம்கள் வழிதவறலாகாது

நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் சீர்குலைக்க முயலும் சக்திகளால் முஸ்லிம்கள் வழிதவறக் கூடாது.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது விடுத்துள்ள "ஈதுல் பித்ர்" பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர் தமது செய்தியில்

(11 ஆம் பக்கம் பார்க்க)



எம். எச்- முகம்மது

வாய்ப்பு ஏற்பட்டது. பதுரு சுஹதாக்களை நினைவு கூர சந்தர்ப்பம் கிடைத்தது. பாவ மன்னிப்பு கேட்க வாய்ப்பு ஏற்பட்டது. அமல்களால் எம்மை நாம் புது மனிதர்களாக்கினோம்.

சுருங்கக் கூறின் "சாலிஹா"ன நல்ல இறை விசுவாசி என்ற நிலையை நாம் அடைய மாண்புறு ரமழான் மகத்தான பாதை காட்டிக் கொடுத்தது; வெற்றி வழியைக் காட்டியது. அல்ஹம்துலில்லாஹ்.

புலர்ந்துள்ள ஈகைத் திருநாள் கொண்டாட்டங்களுடன் மட்டும் பூர்த்தியாகக் கூடாது; ரமழான் தந்த சீரிய

(10 ஆம் பக்கம் பார்க்க)



பாக்கீர் மாக்கார்

பெற்றால் முஸ்லிம் சமுதாயம் மேன்மை அடையும்.

மேற்கண்டவாறு அமைச்சர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர்

வேண்டும்.

நாடு இக்கட்டான ஒரு நிலைமையை எதிர்நோக்கியிருந்த வேளையில் நாட்டில் சமாதானம் நிலவ முஸ்லிம்கள் பாடுபட்டனர்.

முஸ்லிம்கள் என்றென்றும் "சமாதான விரும்பிகள்" என்ற உண்மை எக்காலமும் உணரப்பட வேண்டும்.

பல்வேறு கிராமம் தோறும் முஸ்லிம்கள் கண்ணீரும், கம்பலையுமாகக் காலம் கழிக்கும் பரிதாபநிலை எமது கவனத்தைத் தொட வேண்டும். இந்த நிலைமையைப் போக்க நாம் வழி வகைகளைக் காண வேண்டும்.

ஈத்முபாரக்.



டபிள்யூ- எம்- அமீர்;

கடந்த மாதம் முழுவதும் புண்ணிய கருமங்கள் பலவற்றைச் செய்த நாங்கள் பெரும் பாக்கியசாலிகள். இறைவனின் கட்டளையை ஏற்று அவனுக்காக நோன்பு நோற்று அதன் பிரதிபலனாக நாளை நாம் நோன்புப் பெருநாளைக் கொண்

(10 ஆம் பக்கம் பார்க்க)


مرحبا اهلا وسهلا
على اخواننا المسلمين
في اقطار العالم طرا
فرحنا بمقدمك الينا
يوم عيد المبارك

சந்தோஷகரமான

ஈத் பெருநாளாம்

ஈகைத் திருநாளில் உலகில் வியாபித்திருக்கும் முஸ்லீம் சகோதரர்கள் மீதும் எமது நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

பொலித்தீன் அன் பிளாஸ்டிக் இண்டஸ்ரீஸ் லிமிட்.,

POLYTHENE & PLASTIC INDUSTRIES LTD.,

29, SAN SEBASTIAN STREET
COLOMBO 12.

டெலிபோன்:- 23970


## சிறந்த முஸ்லிம்களாக வாழ உறுதி கொள்வோம்

சிறந்த முஸ்லிம்களாக வாழ இத் திருநாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன்



பதியுத்தீன் மஹ்மூத்

மஹ்மூத் தமது பெருநாள் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது செய்தியில்:-

ஈதுல்-பித்ர் நோன்பு பெருநாளைக் கொண்டாடும் இவ் வேளையில் எனது சகோதர முஸ்லிம் மக்களுக்கு பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

நோன்பு மாதம் தந்த அரிய பயிற்சிகள் எமது தினசரி வாழ்விலும் தொடர வேண்டும்.

நோன்பு நோற்று சிறந்த பண்புகளை எம்மில் வளர்த்துக் கொண்டுள்ள நாம் தொடர்ந்தும் சிறந்த முஸ்லிம்களாக வாழ இத் திருநாளில் திடசங்கற்பம் பூணவேண்டும்.

முஸ்லிம்கள் நாட்டுப்பற்றுடனும், ஐக்கிய உணர்வுடனும் வாழ்ந்து சமுதாய உயர்வுக்குப் பாடுபட வேண்டும். சமுதாயத்தில் இருந்து வறுமையைப் போக்க முஸ்லிம் தனவந்தர்கள் முன்வர வேண்டும்.

ஈத்முபாரக்

## தேசிய ஐக்கியம் நிலைபெறட்டும்

— ஜாபிர் ஏ. காதர்

நாம் நல்லெண்ணமும், ஐக்கியமும், தேசிய நல்லுறவும் நிலைபெற பாடுபட வேண்டும்.

கொழும்பு மத்திய தொகுதி இரண்டாவது எம். பி. அல்ஹாஜ் ஜாபிர் ஏ. காதர் தமது பெருநாள் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

ரமழானின் செய்தியானது சகிப்புத் தன்மை, பொறுமை, நல்லெண்ணம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

நாம் இத் திருநாளில் நல்லெண்ணமும், ஐக்கியமும் தேசிய நல்லுறவும் நிலைபெறப் பாடுபட வேண்டும்.

முஸ்லிம்களின் வாழ்வு சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அந்த வாழ்வு முகம்மது நபி (ஸல்) அவர்களின் உதாரண பூர்வமான வாழ்வாகும்.

முஸ்லிம்களுக்கு எனது ஈத் முபாரக் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## மகிழ்ச்சி நிலவட்டும்

ரமழான் பெருநாளில் நீடித்த மகிழ்ச்சி நிலவட்டும். கலாநிதி ஷேய்க் ஷம்ஸ் அல் பாஸி பவுன்டேஷனின் ஸ்தாபகரும், ஆயுட்காலப் போஷகருமான சங்கைக்குரிய கலாநிதி ஷெய்க் ஸம்ஸுத்தீன் அப்துல்லா அல் பாஸி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தனது பெருநாள் செய்தியில்:—



அப்துல் அல் பாஸி

"ஈதுல் பித்ர்" திருநாளில் முஸ்லிம் சகோதரர்களுக்கு எனது பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையில் கொழும்பிலும், மற்றும் பல்வேறு பாகங்களிலும் இருக்கும் ஷாதுலிய்யா "இக்வான்"களுக்கு எனது ஸலாத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரமழான் பெருநாளில் நீடித்த மகிழ்ச்சி நிலவட்டும். முஹம்மது நபி (ஸல்) அவர்களின் "உம்மத்து" மார்களுக்கு அல்லாஹ்வின் ரஹ்மத் என்னும் பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன். ஈத்முபாரக்.


மங்களம் எங்கும் பொங்குக.
உங்கள் வரவும் ஆகுக.

அனைத்து மக்களுக்கும் உளம் கனிந்த "ஈதுல்பித்ர்" நல்வாழ்த்துக்கள்

ஈத் முபாரக்

கண்டி மா நகரில்



அசல் பவுண் தங்க நகைகளுக்கு நேர்மை, நியாயம், நம்பிக்கை, உறுதி ஆகியவற்றில் தலைசிறந்த இடம்

தாஜ் ஜுவலர்ஸ்

100, டீ. எஸ். சேனநாயக்க வீதி, கண்டி.
கிளை:- 43, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி.
போன்:- 25136 தந்தி:- "மெஹ்பூபா"

# தினபதி ஈகைத் திருநாள் சிறப்பிதழ்

## பெருநாள் கொண்டாடுவதற்கு


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்.

**JAI-NUL JEWELLERS**

**ஜெய்-நுல் நகை மாளிகை**

3, செட்டியார் தெரு சந்தி,
கொழும்பு — 11. தொலைபேசி:— 549477




ரமழான் பெருநாளைக் கொண்டாடும்

இஸ்லாமிய சகோதரர்கட்கும் மற்றும் எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

**எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!**

**ARS**



நிம்மதியான நித்திரையின்றி நுளம்பினல் அவஸ்தைப்படுகிறீர்களா?

நுளம்பு (கொயில்) வர்த்திகளை இன்றே உபயோகியுங்கள்!

சர்வதேசப் புகழும், தரமும் வாய்ந்த இவை, இலங்கை கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சினல் அங்கீகாரம் பெற்றவையாகும்.

பெக்கட் ஒன்றின் விலை ரூ. 17—00 மட்டுமே!

**S. P. SAHUL HAMEED & BROS**

244, Bankshall Street, Colombo 11.
Phone: 25529 REG: No. 199


# யார் அருகதை உடையவர்?

புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இனிய வேளையில் இந்தப் பெருநாளைக் கொண்டாட அருகதை உடையவர்கள் யார் என்பதை அறிவது சிறந்தது.

மாதம் முப்பது நாளும் புனித ரமழான் மாதத்தில் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து நோன்பு நோற்றவர்கள், உண்டு களித்து உவகை கொள்வதற்குப் பெருநாள் தினம் சந்தர்ப்பம் அளிக்கிறது.

அவ்வாறிருக்க நோன்பு நோற்காதவர்களும் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவதற்கு இந்த நாளில் வரிந்து கட்டிக் கொண்டு நிற்பது கேலிக்குரியதாகும்.

தம்மிடம் செல்வம் இல்லாவிட்டாலும் கூடச் செய்யக் கூடிய பர்ளான அமல்களாகிய தொழுகை, நோன்பு முதலியவற்றை நிறைவேற்றாதவர்கள் கூட, இந்த நாளில் நோன்புப் பெருநாளை பர்ளான விடயத்துக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுத்து கொண்டாட வேண்டும் என்று முயல்கிறார்கள்.

பர்ளான ஐந்து வேளை தொழுகையை ஒழுங்காக நிறைவேற்றாதவர்கள், பர்ளான வாரமொரு முறை தொழ வேண்டிய ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்ற முன் வராதவர்கள் எல்லாம், பாவம் வருடம் ஒருமுறை


நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்!

**HATHEE BOOK DEPOT**

79, Sri Vajiaragnana Mawatha,
(Dematagoda Road,) Colombo-9.

(பரிசுத்த குர்ஆன் ஷரீப்புக்கள், இஸ்லாமிய புத்தக வியாபாரிகள்),
— இறக்குமதியாளர்கள் —
தொலைபேசி: 597768.



எமது உளம் நிறைந்த ஈத் முபாரக் நல்வாழ்த்துக்கள்!

எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட ரெடிமேட் ஆடைகள், பிள்ளைகளுக்குரிய ஆடைகள், ஆடவருக்குரிய பாத அணிகளை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**FE Fashion Emporium**

27, பேங்ஷால் வீதி, கொழும்பு — 11



வாடிக்கையாளர்களுக்கு எங்களின் நோன்பு பெருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

சாப்பு சாமான்கள், ரேடியோ கெஸட்டுகள், மின்விசிறிகள், சுவர்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள் ஆகியனவும், ஓமக்ஸ் கைக்கடிகாரங்கள், சுப்ரீம் சுவர்கடிகாரங்களுக்கு விநியோகஸ்தர்களும், எங்களிடம் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**நூர்ஜஹான் கோல்ட் ஹவுஸ்**

முதலாம் மாடி, 135, பாங்ஷால் வீதி, கொழும்பு - 11
தொலைபேசி:— 32353 — 547730



வர்த்தகப் பெருமக்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் எங்களின் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

**ஏ. கே. முகம்மது அப்துல்காதர்**

(நகை வியாபாரிகள்),
170, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு — 11.
தொலைபேசி எண்:— 21447 — 547915.



"ஈதுல்பித்ர்"

புனித நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

அனைத்து அன்புச் சகோதரர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும்

**— ஈத் முபாரக் —**

★ 22 கரட் தங்க நகைகளுக்கும்
★ ஆபரணங்களைத் தயாரிக்க உதவும் உபகரணங்களுக்கும் (டூல்ஸ்)
★ வெள்ளிச் சாமான்களை நியாயமான விலைக்கு


& BROS
244, Bankshall Street, Colombo 11.
Phone: 25529 — REG: No 199.



Emporium
27, பேங்ஷால் வீதி, — கொழும்பு – 11




புனித ரமழான் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம் பெருமக்களுக்கும் ஏனைய எல்லா வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த



"ஈதுல் பித்ர்" வாழ்த்துக்கள்!

★ திருமண வைபவங்கள்,
★ திறப்பு விழாக்கள்,
★ மௌலூது வைபவங்கள்
மற்றும் சமயாசார வைபவங்கள் அனைத்திலும் மணம் கமழும் ஊது பத்திகளில் அதி சிறந்தது




பொபி ★ பொபி ஸ்பெஷல்

தயவு செய்து போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்!

பதிவிலக்கம்: "எம். ஸி. 41650"
பொபி ஊதுபத்தி தயாரிப்பாளர்கள்:

## பொபி இண்டஸ்ரீஸ்

12, முதலாவது ஒழுங்கை,
மாவில்மட, கண்டி.

போன்: 08-25363
தந்தி: "பொபி"


ஆத் தொழுகையை நிறைவேற்ற முன் வராதவர்கள் எல்லாம், பாவம் வருடம் ஒருமுறை வரும் ஸுன்னத்தான பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவது கட்டாயம் எனக் கருதுகின்றனர்.

பர்ளான விடயங்கள் பாக்கி இருக்கும் போது ஸுன்னத்தான விடயங்களைக் கண்டிப்பாக கடைப் பிடிப்பதில் என்ன அர்த்தம் உள்ளது?

பர்ளான நோன்பை ஒழுங்காக நோற்காத நாம், ஸுன்னத்தான பெருநாள் தொழுகையை மட்டும் தொழுது விடுவதால் கடமையை நிறைவேற்றி விட்டதாகக் கருதி விட்டால் அதைவிட அறியாமை வேறு இல்லை.

பர்ளான தொழுகை, நோன்பு முதலியவற்றை புனித ரமழான் மாதத்தில் ஒழுங்காக நிறைவேற்றியவர்கள் யாவரும், இனி வரும் காலங்களிலும் தொழுகையை நேரம் தவறுமல் ஐவேளை தொழ முன்வரவேண்டும்.

புனித ரமழான்மாதத்தில் நாம் பாவங்களிலிருந்து விடுபட்டு வாழ்ந்தது போல வாழ்நாள் முழுவதும் வாழ முயற்சிக்க வேண்டும்.

புனித ரமழான் மாதத்தில் தொழவும், மற்றும் நல் அமல்களைப் புரியவும் ஆரம்பிக்க அனைவரும் தொடர்ந்தும் அவைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த நன்னுளில் நல்லமல் புரியும் வலிமையைத் தந்து நல்லருள் பாலிப்பாணுக! ஆமீன்!!

"ஈத் முபாறக்"

## ஏழை எளிய....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)
லாமிய இதயங்கள் அனைத்துக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள்மாரி பொழியட்டும்!

ஆமாம்! நாயனின் நன்கொடையாக வாய்க்கப் பெற்றிருக்கும் இந்த ஈதுல் பித்ர் பெருநாளின் பெருமகிழ்ச்சி நம் அனைவருக்கும் நற்சாந்தி நல்கட்டும்!

எல்லோரினதும் மிக்க செல்வனை வல்ல அல்லாஹ், தன் அருட்கொடைகளை அள்ளி வழங்கும் "யவ்முல் ஜஸாஃ" என்னும் நற்கூலி நம் அனைவருக்கும் நற்பலன் நல்கட்டும்!

